5-6-57

முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி, எம். எல். ஏ

3- யவனக் கிழவன்

ரோமாபுரிப் பாண்டியன்

தொழில் துறையில் துரோகம்:

காகிதம் செய்கிறார் அங்கே; கபடம் புரிகிறார் இங்கே!

மனிதன் தோன்றிய துவக்கக் காலத்திலிருந்தே தன்னுடைய எண்ணங்களை—செயல்களைக் குறித்து வைக்கப் பெரிதும் முயன்றிருக்கிறான். ஆரம்ப காலத்தில் களி மண்ணில் சில குறிகளை, படங்களை மனிதன் பொறித்து வந்தான். நிரந்தரமாய்—பாதுகாப்பாய் இருக்க வேண்டி செம்பு போன்ற உலோகங்கள் பின்னர் பயன்படுத்தப்பட்டன. ஓலைச் சுவடிகள் உபயோகமாகி, இன்றைக்கு காகிதம் மனித குலத்தின் மாண்புகளை, சிந்தனைகளை, ஆசைகளை, இலட்சியங்களை எழுதி வைக்கப் பயனாகின்றது.

நவீன வாழ்க்கையில் காகிதத்தின் தேவை—முக்கியம் அளப்பிடற்கரிது. காட்டுமிராண்டித்தனத்திலிருந்து கல்வியை இணைக்கும் பாலமாய் காகிதம் திகழ்கின்றது. விஞ்ஞான முன்னேற்றம், இலக்கிய வளர்ச்சி, கலைத் துறையில் ஆக்கம்—இன்னபிற இன்றைய வாழ்க்கைச்சிறப்புகள் காகிதத்தின் துணையால் நடைபெறுகின்றன.

ஒரு நாட்டில் வளர்ந்துவரும் அரசியல் புத்துணர்ச்சியை அறிந்துகொள்ள, கல்வி வளர்ச்சியைக் கணிக்க காகித உபயோகத்தின் அளவு துணை புரிகின்றது. பத்திரிகைகள் நடைபெற, புத்தகங்கள் வெளிவர, அலுவலகங்களில் வேலைகள் நடைபெற காகிதம்தான் பெருமளவுக்குத் தேவைப்படுகின்றது. திடீரென்று உலகில் காகித உற்பத்தியே இல்லாமல் அழிந்துவிட்டால் நவீன நாகரிகம் நிலைகுலைந்துவிடும் என்று சொல்லுவதில் தவறில்லை.

இத்தகு சிறப்புகளைப் பெற்ற மிகத் தேவையான காகித உற்பத்தியில் தென்னகம் பின்தங்கிக் கிடக்கின்றது. நல்ல உயர் ரக புல்வகை, மூங்கில், தேவையான நீர்க் குழம்பு—இன்னபிற காகித உற்பத்திக்கான மூலப் பொருட்கள் திராவிடத்தில் நிறைய உண்டு. என்றாலும் காகிதத் தொழிற்சாலைகள் திராவிடத்தின் காகிதத் தேவைகளை ஓரளவு நிறைவேற்றுகிற அளவில் கூட இல்லை!

இந்தியா முழுவதிலும் பதிவு செய்யப்பெற்ற காகிதத் தொழிற்சாலைகள் 28 ஆகும்! இவைகளில் ஏழு தொழிற்சாலைகள் திராவிடப் பகுதிகளில் உள்ளன. இவைகளில் 55,000 டன்கள் காகிதம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

ஆந்திராவில் 'ஆந்திரா பேப்பர் மில்' என்ற பெயரில் ராஜமந்திரியிலும், 'சீர்பூர் பேப்பர் மில்' என்ற பெயரில் கழநகரைச் சார்ந்த சீர்பூரிலும் உள்ளன!

மைசூரில் 'மைசூர் பேப்பர் மில்' என்ற பெயரில் பத்ராவதியிலும், 'வெஸ்ட்கோஸ்ட் பேப்பர் மில்' என்ற பெயரில் தந்தேலியிலும் இருக்கின்றன!

கேரளத்தில் 'புனலூர் பேப்பர் மில்' என்ற பெயரில் புனலூரிலும், 'திருவிதாங்கூர் ரேயான் லிமிடெட்' என்ற பெயரில் ரேயனுபுரத்திலும் விளங்குகின்றன!

தமிழகத்தில் உமையாள்புரத்தில் 'புதுக்கோட்டை பேப்பர் மில்' என்ற பெயரில் 4,46,625 ரூபாய் மூலதனத்தில் ஒன்று உள்ளது.

மேற்கண்ட ஏழு காகிதத் தொழிற்சாலைகளில் 134 இலட்சம் ரூபாய் மூலதனமுள்ள சீர்பூர் பேப்பர் மில்லின் அலுவலகம் கல்கத்தாவிலும், 5 கோடி ரூபாய் மூலதனமுள்ள வெஸ்ட்கோஸ்ட் பேப்பர் மில்லின் அலுவலகம் பம்பாயிலும் உள்ளன. எனவே, குறிப்பிடத்தக்க அளவில் பெருந்தொகை மூலதனம் போட்டு நடைபெறும் இரண்டு பெரும் காகிதத் தொழிற்சாலைகளின் அலுவலகங்கள் வடநாட்டில் இருப்பதால், திராவிடத்திற்கு அத்தொழிற்சாலைகளில் பிடிப்பு இல்லை என்றே கூறலாம்.

மைசூர் பேப்பர் மில்லின் மூலதனம் 25 இலட்சம் ரூபாயாகும். திருவிதாங்கூர் ரேயான்லிமிடெட் தொழிற்சாலையின் மூலதனம் 1 கோடி ரூபாயாகும். மீதமுள்ள மில்கள் குறைந்த மூலதனத்தில் இயங்கி வருவனவாகும். நல்ல முன்னேற்றம் காண நிறைய வாய்ப்புகள், வசதிகள் இருந்தாலும் திராவிடத்தில் காகிதத் தொழிற்சாலைகள் ஏழுதான் இருக்கின்றன. ஆனால் வடநாட்டில் 21 காகிதத் தொழிற்சாலைகள் இருப்பதுடன், அவைகளில் 2,78,000 டன்கள் காகிதம் உற்பத்தியாகின்றது. ஆக, 80 சதவிகிதம் வடநாட்டிலும், 20 சதவிகிதம் தென்னாட்டிலும் காகிதம் உற்பத்தியாகின்றது.

வட நாட்டில் உள்ள காகிதத் தொழிற்சாலைகள் கொழுத்த மூலதனத்துடன் நடைபெறும் பெரிய மில்களாகும். 'ஓரியண்ட் பேப்பர் மில்'லின் மூலதனம் 276 இலட்சம் ரூபாய்!

'டிட்டாகர் பேப்பர் மில்'லின் மூலதனம் 143 இலட்சம் ரூபாய்!

'கோபால் பேப்பர் மில்'லின் மூலதனம் 132 இலட்சம் ரூபாய்;

'நேஷனல் நியூஸ் பிரிண்ட்

சி. ஜம்பு

அண்டு பேப்பர் மில்' 131 இலட்சம் ரூபாய்!

கோடிக் கணக்கிலே வளமான மூலதனத்துடன் வடநாட்டில் காகிதத் தொழிற்சாலைகள் நடைபெறுகின்றன! தமிழகத்தில் ஒரே தொழிற்சாலைதான் உள்ளது. அதன் மூலதனமோ நாலரை இலட்சம் ரூபாய்! பெரும் மூலதனத்தில் வட நாட்டில் நிறைய தொழிற்சாலைகள் நடைபெற, மிகக் குறைந்த மூலதனத்தில் ஒரே ஒரு காகிதத் தொழிற்சாலை தமிழகத்தில் இயங்குவது வேதனைக்குரியதாகும்.

திட்டமிடப்பட்டு வளரும் இன்றைய பொருளாதார நிலையில், ஒரு காகிதத் தொழிற்சாலையின் ஆண்டு உற்பத்தி அளவு 15 ஆயிரம் டன்களாக இருந்தால், அத் தொழிற்சாலை தேவைப்படும் குறைந்த அளவை உடையதாக எண்ணப்படுகின்றது. இத்தகு நிலையில் தற்சமயம் பத்து காகிதத் தொழிற்சாலைகள் இந்தியாவில் உள்ளன. வெஸ்ட்கோஸ்ட் பேப்பர் மில், சீர்பூர் பேப்பர் மில்—இவைகளின் அலுவலகங்கள் வடநாட்டில் இருப்பதால், மேற்கண்ட சிறந்த பத்து காகிதத் தொழிற்சாலைகளும் வடநாட்டில் உள்ளதாகவே கருதலாம்.

இன்றைக்கு காகிதத் தொழிற்சாலைகளில் இந்தியாவில் கூடுதல் மூலதனம் சுமார் 25 கோடி ரூபாயாகும். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் முடியும் 1961—ம் ஆண்டில் காகிதத் தொழிற்சாலைகளின் மூலதனம் ரூ. 45 கோடியாய் விளங்கும். இப்படி சிறப்பாய் — விரைவாய் வளர்வதற்கான வழிவகைகள் மூலதன ரீதியில் செய்யப்படும் இதே நேரத்தில் காகிதத் தொழில் மிக்க லாபகரமான தொழிலாகும் என்பதையும் அறிந்து கொள்ளுவது நல்லதாகும்.

காகிதத் தொழிற்சாலைகளின் இலாபம் ஆண்டுக்கு ஆண்டு கொழுத்த வளர்ச்சியைக் கண்டிருக்கின்றது. 1939—ம் ஆண்டில் காகிதத் தொழிற்சாலைகளின் குறியீடு 100 எனக் கொண்டால், அது 1953-ம் ஆண்டில் 513 ஆகவும், 1954—ம் ஆண்டில் 666 ஆகவும், 1955—ல் 748 ஆகவும் பெருகியிருக்கின்றது. மேற்கண்ட குறியீட்டிலிருந்து 1953—ம் ஆண்டில் கிடைத்த இலாபத் தொகையைவிட 1955—ம் ஆண்டில் பாதி மடங்கு கூடுதலாக இலாபம் கிடைத்திருக்கின்றது என்பதை அறியலாம்.

இத்தகைய வளமான இலாபம் தரும் தொழில் தமிழகத்தில் இல்லை என்றே கூறலாம்; திராவிடத்தில் குறைவாய் இருக்கின்றது! ஆனால் வடநாட்டில் இந்தியாவின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு வளர்ந்தோங்கியிருக்கின்றது!

எழுதுவதற்கும் அச்சிடுவதற்குமான காகிதத் வகைகள் தேவையில் 80 சதவீதமும், அட்டைகள் தேவையில் 95 சதவீதமும், பேப்பர்கள் தேவையில் 50 சதவீதமும் இந்தியாவில் உற்பத்தியாகின்றன. செய்தித்தாள் அச்சாகின்ற நியூஸ் பிரிண்ட் காகிதம் இந்தியாவின் இன்றையத் தேவை ஆண்டுக்கு 75,000 டன்களாகும். 1961—ம் ஆண்டில் மட்டும் 1,20,000 தேவைப்படலாம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், 1955—ல் நியூஸ் பிரிண்ட் உற்பத்தி 30,000 டன்களே ஆகும். மத்தியப் பிரதேசத்தில் உள்ள 'நேபா பேப்பர் மில்' ஒன்றில் தான் நியூஸ் பிரிண்ட் பேப்பர் உற்பத்தியாகின்றது. எனவே இத்தகு காகிதம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை தமிழ் நாட்டில் அமைய ஆவன செய்யப்பட வேண்டும்.

[தொடர்ச்சி பக்கம்—12]

படிப்பதற்கு முன்னும்... ...படித்த பின்னும்

வெள்ளி 5—6—59 சென்னை

மனக் கதவைத் திறப்பீர்!

ஓரிடத்தில் மலையெனப் பொருள் குவிந்திருக்கலாம்—அவையனைத்தும் மழைக் காலத்துக் காளானாய் மறைந் தொழிந்துவிட நெடுங்காலம் பிடிக்காது! ஆனால், உழைப்பென்ற பெருஞ் செல்வம் படைத்தவனுக்கோ சாகாத பெருமையுண்டு; என்றும் மாளாத மதிப்புண்டு!

உழைப்புக்கு விழா எடுக்கிறார்கள்; உழைப்பவனுக்கு வெற்றி வாகை சூட்டுகிறார்கள்—இருபதாம் நூற்றாண்டு சந்திக்கின்ற சரித்திரத் திருப்பம் இது!

உழவன் காலிலே படிந்த சேறு, உலகத்தின் கண்களுக்குச் சந்தனமாகத் தோன்றி மணம் வீசுகிறது! ஆலையிலே இயந்திரத்தோடு போராடுகின்ற தோழன் சிந்துகிறானே வியர்வை; அது பன்னீராகப் பரிமளிக்கிறது, அவனது மிருக உழைப்பால் வாழ்வை மிருதுவாக்கிக் கொள்ளுகின்ற இந்த அகிலத்திற்கு!

ஒய்யார வாழ்வுக்கும் ஓயாத உழைப்புக்கும் உள்ள வேறுபாட்டை உலகம் கண்டு கொண்டுவிட்ட இந்தக் காலத்தில்தான், எவரும் செய்யாத தொண்டெல்லாம் செய்வோம் என்று மார்தட்டிக் கொள்ளும் இந்த நாட்டுக் காங்கிரஸ் அரசாங்கம் கண்களைக் குளமாக்கும் செய்திகளை அனுப்புகிறது.

திட்டங்கள் அமைப்போம்; நாட்டின் வாட்டத்தை விரட்டுவோம்—என்று வாய்ப்பறையடிப்பவர்கள், திட்டங்களின் சாதனைகள் இவையிவை என்று அழகுமிக்க காகிதத்தில் தீட்டிக் காட்டுவதில் தவறுவதில்லை! புள்ளிவிபரத்தைப் பூரிப்போடும் புளகாங்கிதத்தோடும் எடுத்துக் கூறுவதில் பின்வாங்குவதில்லை!

அப்படித்தான் நம் கண்களில் கொள்ளிக் கட்டையைச் சொருகுவது போன்ற புள்ளிவிபரம் ஒன்றை இப்போது வெளியிட்டிருக்கிறார், திட்ட மந்திரியான குல்ஜாரிலால் நந்தா. நாட்டின் நல்வாழ்வுக்காகத் துவங்கிய ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவடையும் நேரத்தில் கூட இந்த நாட்டைப் பீடித்துள்ள பயங்கரமான தொழுநோயாம் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிவதற்கான வழிவகைகளைக் காணோம்.

1956—ம் ஆண்டில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டபோது நாட்டில் வேலையற்றோர் எண்ணிக்கை 55 இலட்சமாக இருந்தது. இந்த எண்ணிக்கை, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள் 70 இலட்சமாக உயர்ந்துவிடும். இந்த அச்சுறுத்தும் எண்ணிக்கை, 11,000 கோடி ரூபாயில் ஆக்கப்பட இருக்கின்ற மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒழிக்கப்படும்; அல்லது குறைக்கப்படும் — என்றுதான் ஏமாற்றத்தால் வெந்துபோன உள்ளங்கள் கருதும். ஆனால், அந்த நப்பாசையையும் நசிக்கிப் போடுகிற அளவில் நந்தா தருகிறார் புள்ளிவிபரம்! அதாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்த நாட்டிலே வேலையற்றுத் தவிப்போரின் தொகை 2 கோடியே 10 இலட்சமாகப் பெருகிவிடுமாம்! நாம் சொல்லவில்லை; இந்த நாட்டை ஆளுகின்ற அமைச்சர் குழுவில் ஒருவர்தான் இந்த அபாயகரமான உண்மையை மனவேதனையோடு வெளியிட்டிருக்கிறார்!

இந்தக் காத்திருக்கும் கொடுமையை எப்படித்தான் சமாளிக்க முடியுமோ—என்ற சஞ்சலத்தில் ஆழ்ந்துகிடக்கிறது இந்திய உபகண்டம்! அதே நேரத்தில், 'ஏக இந்தியா'வை விட்டு விட்டு, தமிழகத்தின் பக்கம் பார்வையைத் திருப்பினாலும், அத்தகைய அச்சமூட்டும் கணக்குத்தான் கிடைக்கிறது! சென்ற எப்ரல் மாதம் முடிய தமிழகத்தில் வேலையில்லாதார் தொகை 1,20,267—ஆகும் என்று வேலை தேடித் தரும் நிலையங்களிலிருந்து தகவல்கள் கிடைத்திருக்கின்றன! இதைத் தவிர, அத்தகைய நிலையங்களின் உதவியைத் தேடாத எத்தனை 'இலட்சங்கள்' தமிழகத்தின் தெருக்களிலே அலைந்து கொண்டிருக்கின்றனவோ தெரியவில்லை!

படிக்கும் வாய்ப்பில்லாப் பாமரர்கள்; படித்து முடித்த பரிதாபத்திற்குரியவர்கள்; பட்டம் சுமந்தவர்கள்—இத்தகையோர்தான் இன்று பட்டினிப் பட்டாளமாகப் பெருகியிருக்கிறார்கள்! அவர்களது வாழ்வு சுந்தரச் சோலையாக வேண்டாம்; புயல் வீசும் பாலையாக மாறுவதையாவது தடுக்க வேண்டாமா? இந்த நல்ல மனம் நம்மை ஆளுகிறவர்களுக்கு இல்லையே—என்றுதான் எண்ணி ஏங்க வேண்டியிருக்கிறது!

இல்லாதோருக்கு வேலை தேடித் தரவேண்டாம்; வேலையில் இருப்போரையும் வெளியே துரத்தும் கேடுகெட்ட செயலையாவது களைந்தெறிய வேண்டாமா, இந்த நாட்டின் காவலர்கள்? பணமுதலைகளின் பக்கத்திலே சுகம் காணுகின்ற சுதந்திரப் புதல்வர்கள், அந்த முதலைகளின் வாயிலே இந்த நாட்டு ஏழையர் உலகத்தை இரையாகத் திணிக்கின்ற இருதயமற்ற செயலையல்லவா காண்கிறோம்!

பணி செய்ய வாய்ப்பளிப்பீர்—இப்படி முழங்குவோர் இலட்சக் கணக்கானோர்! செய்கின்ற பணிகளிலிருந்து துரத்தியடிக்கப்படுகிறவர்கள் ஆயிரக் கணக்கானோர்!

முதலாளி வர்க்கத்தின் இருதயக் கூட்டிலே என்னதான் இருக்கிறது என்று தெரியவில்லை எவருக்கும்! மூடிக்கிடக்கின்றன அவர்களின் மனக் கதவுகள்! அதுபோலவே மூடப்படுகின்றன, தொழிலகங்களின் நுழைவுக் கதவுகள்!

மதுரையிலே வெள்ளைக்கார முதலாளி ஹார்வியின் மில் கதவுகள் அடைக்கப்பட்டு விட்டன! "வசதிகள் மிகக் குறைவு; விளைவை மட்டும் அதிகம் எதிர்பார்க்கலாமா? எங்களுக்குத் தேவைகளை அளிப்பீர்; பின் சேவையில் பலன் காண்பீர்!' எனறு கோரிக்கை எழுப்பினராம்; தொழிலாளர்கள்! இது ஒரு மாபெரும் குற்றமாம்! ஆகவே ஹார்வி மில்லின் இரும்புக் கதவுகள் மூடிக்கொண்டன! அதைத் தொடர்ந்து தூத்துக்குடியிலும், அம்பாசமுத்திரத்திலும் அந்த நிர்வாகத்திற்குச் சொந்தமான ஆலைகளும் அடைபட்டுவிட்டன!

இதன் விளைவு என்ன? நிரம்பி வழியும் முதலாளியின் இரும்புப் பெட்டியில் புதிதாக எதுவும் சேராது! ஆனால் புதிதாக இருபத்திரண்டாயிரம் பசிகாரர்கள் நாட்டிலே உற்பத்தியாகிவிட்டார்கள்!

அதைப் போலவே, சென்னையில் 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் அலுவலகத்தை மூடி விட்டார், வடநாட்டு கோயங்கா! எழுநூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் எதிர்காலம் சுட்டிக் காட்டுகிற பயங்கரத்தை எண்ணி ஏங்கிக் கிடக்கிறார்கள்! மறியல் நடத்துகிறார்கள்; பண மூட்டைக்குக் காவல் நிற்கும் இந்த அரசாங்கத்தின் காவலர்கள் அவர்களைச் சிறையில் அடைக்கிறார்கள்!

இந்தக் கொடுமை அகல அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்! தொழிலாளர்களின் கோரிக்கையிலே குறைபாடுகள் இருந்தால்கூட, அரசு மத்திய நிலையில் நின்று விளக்கிச் சொல்லி, வறுமையின் கோரப்பிடியிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும்! அவசியமானால், மூடப்படும் ஆலைகளின் நிர்வாகத்தை அதிகாரத்தின் துணைகொண்டு அரசாங்கமே மேற்கொண்டு நடத்த வேண்டும்!

இதற்குப் புதிய பலமோ—அல்லது சட்டத்தில் இடமோ தேட வேண்டிய அவசியமல்லை! ஏழையர் குலத்தின் நிலையைச் சற்று நேரம் சிந்தித்துப் பார்த்தால் போதும்!

ஆகவே, தேம்பியழுகின்ற தொழிலாளத் தோழர்களின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம்; துரோகச் செயலுக்குத் துணை நிற்க வேண்டாம் அரசினர் என்று! உங்கள் மனக் கதவைத் திறவுங்கள்; அதிலே மண்டிக் கிடக்கும் திமிருக்கு விடை கொடுங்கள்! அலட்சியத்தை அடித்து விரட்டுங்கள்! கொஞ்சம் மனிதாபிமானத்திற்கு இடம் கொடுங்கள்! ஆமாம்; உங்கள் அகம் திறந்தால், தொழிலகங்களின் இரும்புப் பூட்டுகள் தாமாகவே தூள் தூளாக உடைந்துவிழும்! ஃ



பேனா ஓவியம்... [அடுத்த பக்கம்]

குஷ்டரோகி — சேற்றிலே நடமாடுகின்ற புழுக்களைப்போல் நச்சுக் கிருமிகள் நெளிந்தோட; உடல் அழுக; உதிரம் கொட்ட; அங்கமெல்லாம் பங்கப்பட்ட பயங்கரப் பிறவியா நீ — உனக்கும் இடமுண்டு; உன் உரு மாற்ற மருந்துண்டு; உல்லாச வாழ்வுண்டு!

பிச்சைக்காரன் — எச்சில் இலை நோக்கி ஓடுகின்ற ஈனப் பிறவி என்று சொல்கிறார்கள் உன்னை? அவல வாழ்வென்று குமுறுகிறாய்? அஞ்சற்க; அஞ்சற்க! நாலு பேரிடம் கை நீட்டினாலும், உன் வாழ்வேட்டைத் தட்டாமல் தடங்காமல் தீட்டிக் கொண்டே போகலாமே!

கொலைகாரன் — வருக; வருக தோழனே! நீ வஞ்சகத்தின் மொத்த உருதான் என்றாலும், வளமெலாம் பெற்று வாழ முடியுமப்பா, சட்டத்தின் ஏதாவது ஒரு துளி உனக்கு சாதகமாக மாறிவிட்டால்; அல்லது சாதுர்யத்தின் சாயல் உன் சூதுத் திட்டத்திற்கு துணை புரியத் துவங்கிவிட்டால்! அப்புறம் உன்னைத் தடுப்பாரில்லை; தலை நிமிர்ந்து நடக்கலாம், நீ!

விபச்சாரி — சமுதாயத்தின் அபாயச் சின்னமென்று உன்னைத் தூற்றுகிறார்கள்? உன்னை அழகுச் சின்னமாக அலங்கரிக்க ஆயிரமாயிரம் சல்லாபப் பித்தர்கள் உண்டு; அவர்கள் வாரி யிறைக்கின்ற வற்றாத பொருளுண்டு; ஆண்டவர்களையும் நீ அடிமையாக்கலாம் பெண்ணே —அவர்களின் அரவணைப்பில்; ஆலிங்கனத்தில் இந்த அகிலத்தையேகூட விலை பேசலாம்!

பிணம்—வாழ்ந்த கால வரலாற்றை மறந்து வாழ்வை முடித்துக் கொண்ட சடலமே! நாளை கடந்தால் நாற்றமெடுப்பேனே; அண்டுவோர் யாருமற்ற அழுகல் பண்டமாகி விடுவேனே — என்று வேதனைப்படுகிறாயா? விழி மூடிக் கிடக்கும் சவமே; தெரியாதா உனக்கு? உன்மேல் இனி மலர் தூவுவோர் உண்டு! மணம் தரும் வாசனைச் சாற்றைத் தெளிப்போர் ஏராளம்! வாழ்ந்த காலத்திலேயே நீ கண்டிராத வாழ்த்தை வாரி இறைக்க அணி அணியாய்த் திரள்வோர் ஆயிரக் கணக்கானோர்!

ஆமாம்; இவர்களுக்கெல்லாம் மதிப்புண்டு; வாழக்கையையே சூதாட்டமாக மாற்றிக் கொண்டவர்களுக்கெல்லாம்கூட சுகமான வாழ்வுண்டு!

ஆனால், அந்தோ கொடுமை! அவனைப் பாருங்கள்! இத்தனை பேருக்கு மத்தியிலே பித்தனைப்போல் துரத்தப்படுகிறானே; அந்த பரிதாபத்திற்குரியவனின் —பழிவாங்கப்படும் தோழனின் சரித்திரத்தைக் கேளுங்கள்!

அவன் அசுத்தப் பிறவியாம்! அவமானச் சின்னமாம்! அழுக்கு முத்திரையாம்! நாட்டிலே நான்கு பேருக்கு மத்தியில் நடமாடக்கூடாத கடைமகனும்!

பேராசிரியரும், பெரும் புலவரும்— நூலாசிரியரும் நுண்ணறிவுத் திறனுடையோரும் — வாதாடும் வழக்கறிஞரும், கவிபாடும் காவியச் சிற்பியும் — அரசாள்வோனும், அவன் ஆட்சியில் சிக்கிய ஆண்டிக் கோலத்தினரும் வாழுகின்ற பூமியில், வஞ்சகர்களும் வாழலாம்; ஆனால் இந்த வாயில்லாப் பூச்சி மட்டும் வாழக்கூடாதாம்!

சீரழிந்தவர்களும், சிறப்பிழந்தவர்களும் நடமாடும் மண்ணிலே அவன் சிரம் உயர்த்தக்கூடாதாம்! சிரிக்கவும் கூடாதாம்!

அழிக்கப்பட வேண்டிய அத்தகைய கொடியவனா — என்று கேட்கிறீர்களா? இல்லை; இல்லை! நசுக்கப்பட வேண்டிய நச்சரவம் அல்ல அவன்! ஆனாலும், அந்த உழைக்கத் தயங்காத உத்தமத் தோழனை—உறுதிக்கோர் இலக்கணமாய்; உலுத்தர்களின் உயர்

எண்ணத்தால் சிறுத்தோரும் வண்ணத்தால் கறுத்தோனும்!

வுக்கோர் அடிக்கல்லாய் அமைந்தவனை வெறுத்து ஒதுக்குவானேன்?

மலையொத்த காரணம் வேறு ஏதுமல்ல; மனமொத்து வாழ முடியாது உன்னோடு என்று வெறுத்தொதுக்கும் பண்புக்கு நல்ல கருத்தற்றோர் தரும் விளக்கம்—அந்தோ பரிதாபம்! அவன் 'கறுப்பாக'ப் பிறந்துவிட்டது தானும்!

அவன் உள்ளம் வெள்ளை தான்! ஆனாலும், கறுப்பாகப் பிறந்துவிட்ட கொடுமையால் வாழ்வையே நெருப்பாக்கிக் கொள்ளத்தான் வேண்டும் என்கிறார்கள் நிறத்தால் வெள்ளையாகப் பிறந்துவிட்டவர்கள்!

எண்ணத்தால் சிறுத்தவர்கள், வண்ணத்தால் கறுத்தவர்களின் மேல் நடத்துகின்ற காலத்தால் அழியாத இந்தப் 'பேயாட்டத்'திற்கு முடிவே இல்லையா—என்று உலகத்தை நோக்கி ஏக்கத்தோடு கேட்கின்றது; அந்த ஏய்க்கப்பட்ட இனம்!

முள்ளின்மேல்தான் அமைக்கப்பட்டுவிட்டது அவனுடைய வாழ்வு; அதையும் மூளியாக்க வேண்டுமென்று துடிக்கிறது, மூர்க்க சக்தி!

ஓடுகிறேன்; மாடாய்ப் பாடுபடுகிறேன்; என்னையும் வாழ விடு; மானத்தோடு சாகவிடு— என்று கெஞ்சுகிறான்; நிறத் திமிர்பிடித்த வெள்ளை ஏகாதிபத்தியம் கல்லைப்போல் காலுயர்த்தி அவனை நசுக்கிப் போடத்தான் செய்வேன் என்று எக்காளமிடுகிறது! அமைதியான வாழ்வு உனக்கில்லை; அற்ப சுகத்திற்கும் நீ பிறக்கவில்லை என்று அவன் குரல்வளையை நெறிக்கப்பாய்கின்றனவே கொடிய கரங்கள், அதை ஒடித்துப்போட உலகத்தில் நீதி வாழவில்லையா; மனிதாபிமானம் எங்கே போய் மறைந்து கொண்டது—என்ற வினாக்குறிகள் அங்கிங்கெனாதபடி எங்கும் தோன்றுகின்றன!

ஆனாலும் என்ன பலன்? சாதி சமய பேதமற்ற சமதர்ம நெறி வளரும் நாளில்—நாகரிகத்தின் உச்சாணிக் கொம்பிலே உலகம் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கும் காலத்தில் — இந்தக் கேவலத்திற்கு 'ஆரத்தி' எடுப்பவர்களும் வாழத்தான் செய்கிறார்கள், தென்னாப்பிரிக்கச் சீமையிலே!

போர் நடத்திச் சேர்த்துக் கொண்ட நாடல்ல அது! அவன் பிறந்த மண்; அவன் தவழ்ந்த தாயகம்; நாளை பிணமாகச் சாயப் போகும் பூமி! அங்குதான் நேரம் கிடைத்தபோது, நேத்திரங்களில் மண் தூவிப் புகுந்த வெள்ளையர்கள், இந்தப் புதிரான சதித் திட்டத்தைப் புகுத்தினார்கள்!

இம் மோசச் செயலை எதிர்த்து, "ஆகாது இந்த அக்கிரமம்" என்று காந்தியார் போர்க் கோலம் பூண்ட வரலாற்றையும் சரித்திரம் மறந்திருக்காது!

அன்று அவர் நடத்திய உரிமைப் போராட்டம் பலரது உயிர்களைப் பலி வாங்கிற்று! ஆனால் பழிக்கஞ்சா பாதகர்களின் நெஞ்சிலே அன்று புகுந்திருந்த பகையுணர்ச்சி இன்றுவரை அழியாததுதான், உலகத்தின் எட்டாவது அதிசயமாகத் தோன்றுகிறது! நாடோடியாக வந்த இனத்தவர்கள் நடமாடுகின்ற இடத்திலே, அந்த நாட்டுக்குடையவன் தலைகாட்டக் கூடாதாம்! வெள்ளைச் சிறுவர்களுக்குப் பள்ளிகள் கட்டினால், அங்கே கறுப்புத் தோல் படைத்த பாலகனுக்கு இடமில்லை! பூங்காவிலேயும் தனியிடமாம்; பிரயாண வாகனங்களிலேயும் 'நுழையாதே' என்ற தடையுத்தரவாம்!

அந்த ஏகாதிபத்தியப் பித்தேறியவர்களின் சாகாத திமிரினால் உலகமே வியப்படையும் புதிய செய்தி ஒன்று இப்போது கிடைத்திருக்கிறது! மேற்கத்தியத் தீவைச் சேர்ந்த கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் விரைவில் தென்னாப்பிரிக்காவிற்கு விளையாட வரப் போகிறார்கள்.

ஆனால் அவர்கள் யாரும் வெள்ளைக்காரர்களுடன் விளையாடக் கூடாது; அந்தக் கறுப்பு நிறத்தவர்கள், தென்னாப்பிரிக்காவின் பூர்வகுடிகளை மட்டும்தான் விளையாட்டு மைதானத்தில் சந்திக்க வேண்டும் — இந்தக் கட்டுப்பாட்டை அங்கிருக்கும் வெள்ளை அரசாங்கம் திடீரென்று விதித்திருக்கிறது!

அதுமட்டுமல்ல; அடுத்த ஆண்டு ரோம் நகரிலே நடைபெற இருக்கிற அகில உலக ஒலிம்பிக் விளையாட்டுப் பந்தயத்தில் தென்னாப்பிரிக்காவின் சார்பிலே விளையாடப் போகிறவர்கள், அங்கு வாழும் வெள்ளையர்கள் மட்டுமேதானும்! பட்டியல் தயாரித்திருக்கிற அந்த அரசாங்கம், விளையாட்டிலே நல்ல தேர்ச்சிபெற்ற தென்னாப்பிரிக்கர் ஒருவரைக் கூடச் சேர்த்துக் கொள்ளவில்லையாம்!

இந்த துரோகச் செயல்குறித்து திகைத்துக் கொண்டிருக்கிறது உலகம். அந்த வியப்பு தீருவதற்கு முன்னாலேயே மற்றுமொரு திடுக்கிடச் செய்யும் செய்தியும் அங்கிருந்து தீயைப்போல் பரவுகிறது!

தென்னாப்பிரிக்க பூர்வ குடிகளுக்கு அளிக்கப்பட்டிருந்த ஒரே ஒரு உரிமை நேற்றுவரையில் வாக்குரிமை மட்டுமேதான்! அதையும் பறித்துவிட வேண்டும் என்ற பாழும் செயலில் இறங்கிவிட்டதாம், அந்த ஏகாதிபத்திய அரசு! பாராளுமன்றத்திலே சட்டம் கொணரவும் சதித் திட்டங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றனவாம்!

காலமெல்லாம் வஞ்சிக்கப்பட்டான், அக் கறுப்பு நிறத்தான்! சொந்த நாட்டிலேயே வெந்த உள்ளத்தோடு நடமாடினான்! அன்னை பூமியின் மடியில் அவன் அழுதழுது சிந்திய கண்ணீரில் அந்தக் கொடுங்கோலர்களின் இனவெறி கரைந்தோடவில்லை. ஆனால் அதனினும் கொடுமையாம்; அவர்கள் விதைத்த துரோக வித்து வளர்ந்து —தழைத்து—பலகிளை விட்டப் பெருமரமாக மாற நல்ல நீராக அல்லவா பயன்பட்டு விட்டது!

உவகையை இழந்தான்; உடன் பிறந்தார் உயிரையும் இழக்கக் கண்டான்; பொறுத்துக் கொண்டான்! ஆனால் இன்று......பிறப்பு உரிமையையே பறிகொடுக்கும் பயங்கரமான நிலைமைக்கும் துரத்தப்பட்டு விட்டான், அந்தத் தூயவன்!

அமெரிக்க நாட்டு மண்ணிலே அடிமை விலங்கொடிக்கப் போராடிய ஆப்ரகாம் லிங்கன் அகிலத்திற்குத் தந்த மனிதாபிமானக் கருத்துக்கள் அங்கே மண்ணுக்குள் புதைக்கப்படுகின்றன!

காந்தியார் நடத்திய கடமைப் போராட்டத்தின் தூய வரலாறு தூக்கி எறியப்பட்டுவிட்டது!

நிறப் பூசல் இப்போது புது உருக் கொண்டுவிட்டது, தென்னாப்பிரிக்காவிலே!

"ஜன நாயகம் . பேசுகின்ற ஜகத்தீரே! என்ன செய்கிறீர்? எங்களை ஏது செய்யச் சொல்கிறீர்கள்?" —என்றுதான் கேட்கிறான், வெறிபிடித்த நிறத் திமிங்கிலத்தின் வாயில் சிக்கி விட்ட அந்த வாழமுடியாதவன்!

—சொர்ணம்

ஜூலை 10 முதல் வெளி வருகிறது!

"இன முழக்கம்"

(வார ஏடு)

ஆசிரியர் : சி. பி. சிற்றரசு

பதிப்பாளர் : கண்ணப்பா வள்ளியப்பன்

[முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை]

4. இராசகோபால நாய்க்கன் சந்து,
சிந்தாதிரிப்பேட்டை—சென்னை-2

தி.மு.கழகம்: என்னப்பா காங்கிரஸ்; என்ன உன் முகத்திலே ஒரே 'சோக ஜோதி'யாக இருக்கிறது? கார்ப்பரேஷன் அடி இன்னுமா மறையவில்லை?

காங்: அட....அதெல்லாம் அப்படி ஒன்றுமில்லை, தோழரே! உலகத்தில் நல்லவர்கள் எல்லாம் செத்துக் கொண்டிருக்கிறார்களே.......

ஆயிரங்கள் இருபதை விழுங்கினர்!

தி.மு.க: 'நான் மட்டும் ஏன் இன்னும் உயிரோடு இருக்கிறேன்' என்று உனக்கு நீயே எண்ணி வருந்துகிறாயா?

காங்: உனக்கு எப்போதுமே கிண்டல்தான்! அமெரிக்க வெளிவிவகார மந்திரி டல்லஸ் இறந்துவிட்டாரே; தெரியாதா உனக்கு? இதோ பார், நமது பண்டித நேரு எவ்வளவு உள்ளமுருகி அனுதாபப்பட்டிருக்கிறார்!

தி.மு.க: நானும் படித்தேன். திருமதி டல்லசிடம் நேரே சென்று தனது அனுதாபத்தைத் தெரிவிக்கும்படி அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதுவரைக் கேட்டுக் கொண்டிருக்கிறாராமே!

காங்: அடடா!...அநியாயமான இழப்பு.......அமெரிக்காவுக்கே நஷ்டம்! அடுத்த ஜனாதிபதியாக வரக் கூடியவர் அவர் என்று உலகம் சொல்லிற்றும்!

தி.மு.க: உனக்குத் தெரியுமா; அமெரிக்காவில் ஒரு குழந்தை பிறந்தவுடன், "இவன் ஒரு நாள் வெள்ளை மாளிகையில் குடிபுகலாம்" என்று வாழ்த்துவார்களாம்!

காங்: வெள்ளை மாளிகையா? நமது கார்ப்பரேஷன் மாளிகையையா குறிப்பிடுகிறாய்?

தி.மு.க: இல்லையப்பா; அமெரிக்காவிலே ஜனாதிபதி வசிக்கிற மாளிகை பிரசித்திபெற்ற 'வெள்ளை மாளிகை'யாகும். அதாவது, அமெரிக்காவில் பிறக்கிற ஒவ்வொரு குடிமகனுக்கும் ஜனாதிபதியாவதற்குத் தகுதி உண்டு என்ற தத்துவம்தான் அந்த வாழ்த்திலே புதைந்திருக்கிறதாம்!

காங்: அதை ஏன் இப்போது சொல்லுகிறாய், நீ?

தி.மு.க: புரியவில்லையா? டல்லசைப் போற்றுகிற நீங்கள், அவர் வாழ்ந்த நாட்டின் இந்த

புலம்புகின்ற தோழர்களே; புதிய சரித்திரத்தைப் பாரீர்!

நல்ல வழக்கத்தை ஏற்றுக்கொள்வீர்களா? அப்பப்பா... சுயநலத்தின் கோர சொரூபங்களாயிற்றே நீங்கள்! பதவித் தேனில் மொய்க்கும் ஈக்களின் கும்பலே....! உங்களால் கொட்டப்பட்டவர்கள் எவ்வளவு பேர் தெரியுமா; இங்கே? அதிகாரம் செலுத்தும் அந்தஸ்து எங்களின் பிறப்புரிமை என்று 'ஜய பேரிகை' கொட்டிய காங்கிரசில் நீயும் ஓர் அங்கம்தான் என்பதற்காகச் சொல்கிறேன்!

காங்: நிறுத்து; நிறுத்து! காங்கிரஸ்காரர்களின் விசாலமான மனதைப்பற்றி உனக்குத் தெரியாது!

தி.மு.க: ஆமாம்; ரொம்பவும் விலாசம்தான்! ஆயிரக் கணக்கான சதுர மைல்கள் பரப்பளவு கொண்ட அதைஅளக்க கருவிகளேகூட கிடைக்கவில்லையாமே! ஏனப்பா உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்கிறீர்கள்...? அதிகம் போக வேண்டாம் தோழனே; நீயும் நானும் இதோ நின்று கொண்டிருக்கிறோமே; இந்த சென்னை மண்ணுக்கு தி.மு.க.வின் தொண்டு கிடைக்கக் கூடாது என்பதற்காக நீங்கள் நடத்திய சூதுக்கள் கொஞ்ச நஞ்சமா? நகர மக்கள் வரவேற்ற ஒரு மாபெரும் அமைப்பை அதிகாரக் காலடியிலே அழுத்திக்கொண்டிருக்க உங்கள் காங்கிரசார் செய்த துரோகச் செயல்களை நீ மறக்கலாம்; மானத்தை மறந்த உம் கட்சி மறக்கலாம்; நாடு மறக்காது தம்பி; நல்லவர்கள் மறக்கமாட்டார்கள்!

காங்: ஆமாம்; ஆமாம்; இப்போது தி.மு.க. மேயர்தான் வந்து நகரம் என்ன வாழ்ந்துவிட்டது?

தி.மு.க: பரிதாபப்படுகிறேன்! நீ என்ன செய்வாய்; உன்னை எல்லாம் ஆண்டுகொண்டிருக்கிற அமைச்சர் பெருமக்களே கேலி பேசுகிறார்களே, தி.மு.கழகம் என்ன சாதித்துவிட்டது—என்று!

காங்: ஆமாம்; பிறகென்ன? தினம் தினம் குவிகிற பாராட்டுக்களைச் சுமந்துகொண்டால் மட்டும் போதுமா? மாலைகளுக்குக் கழுத்தை நீட்டினால் மட்டும் தீர்ந்ததா?

தி.மு.க: இதிலிருந்தே புரிந்துகொள் தோழனே! சென்ற 300 ஆண்டுகளாக நகரசபைத் தலைவர் நாற்காலியில் யார் யாரோ அமர்ந்திருக்கிறார்கள். இப்படி நாடு புகழும் பேறு பெற்றாரை நீ கண்டிருக்கமாட்டாய். சரித்திரத்தில் புதிய திருப்பத்தை இப்போது காண்கிறாய் — பொறாமை உன் நெஞ்சை அடைக்கிறது! ஆகவேதான் புலம்புகிறாய்; புலம்புகிறாய்!

காங்: நாங்கள் புலம்புவது இருக்கட்டும்; நீங்கள் என்ன புதியன சாதித்துவிட்டீர்கள்?

தி.மு.க: புதியன சாதிப்பது பிறகு....இப்போதுதான் முதல் கட்டம்.......பழைய குற்றவாளிகளைக் கூண்டிலேற்றும் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

காங்: குற்றவாளிகளா?

தி.மு.க: என்னை மன்னித்துவிடு தோழனே! அதைவிட பயங்கரமான வார்த்தைகள் வேறு கிடைத்தால் அழைத்துக் கொள்! அபாய விளக்குகள்—மக்கள் விரோதிகள்—சமுதாயத் துரோகிகள்—நம்பிக்கையைக் கொன்ற நச்சரவங்கள்—பொது வாழ்வின் கொலைகாரர்கள்—இப்படியெல்லாம்கூட அகராதியில் கொடிய அர்த்தங்கள் கிடைக்கலாம்!

காங்: உன் பேச்சிலே நெருப்பு பறக்கிறதப்பா!

தி.மு.க: செயலிலே நெருப்பாகக் கிடந்தார்கள் உனது காங்கிரஸ் இயக்கத்தார். அந்த நெருப்பிலே இந்த நகரத்து மக்கள் வரி என்ற பெயரால் தந்த நோட்டுகள் எரிந்து சாம்பலாகிவிட்டன! அதை நினைக்கும்போது அழுது புலம்புவோர் ஆயிரக் கணக்கிலே உண்டு! 'சபித்து'த் தீர்க்கின்ற சாக்கடையோரவாசிகள் எண்ணற்றவர்கள்! தெரியுமா, உனக்கு?

காங்: எதைச் சொல்கிறாய் என்றே தெரியவில்லையே!

தி.மு.க: நகரசபையை அலங்கரித்துக் கொண்டிருந்தார்களே முன்பெல்லாம், புனிதமான காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் — அவர்கள் புரிந்த கேடுகளைத்தான் சொல்கிறேன்! மற்றவர்களை நுழைய விட மாட்டோம் என்று மார் தட்டினார்களே; மறைமுக சூழ்ச்சிகள் செய்தார்களே; அதன் காரணம் என்ன என்பதைச் சொல்கிறேன்!

காங்: என்னைக் குழப்புகிறாயே!

தி.மு.க: குழம்பிப் போன குட்டையாகத்தான் தெரிகிறது தோழனே, முன்னாள் நகரசபை

[தொடர்ச்சி பக்கம்—8]

தொழுதவர்கள் தூற்றுகிறார்கள்!

"மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் 11,000 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றி வைக்கப்படவேண்டுமென திட்ட அமைப்பு நிபுணர்களின் சமீபக் கூட்டமொன்றில் ஒரு யோசனை வெளியாகியிருக்கிறது. இதற்காக மேற்கொண்டு 2,000 கோடி ரூபாய்க்கு அதிகப்படி வரிகள் விதித்தாக வேண்டுமாம்! இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் ஏறிய 900 கோடி ரூபாய் வரிச் சுமையையே மக்கள் தாங்க முடியாமல் தவிக்கின்றனர். எனினும், அதைப்போல் இன்னும் இரு மடங்குக்கு அதிகமான சுமை ஏற்ற இடமிருப்பதாக சில நிபுணர்கள் பேசுவது ஆச்சரியமாகும்!.......

சுகபோகங்களில் திளைப்பவர்களை இரண்டொரு வசதிகளைக் குறைத்துக் கொள்ளச் சொன்னால் அதில் அர்த்தமுண்டு. காலட்சேபத்திற்கு அத்தியாவசியமாக வேண்டிய வசதிகளே போதிய அளவின்றித் திண்டாடும் மக்களைப் பார்த்து, மேற்கொண்டு வயிற்றைக் கட்டும்படி உபதேசிப்பது ஒரு கொடிய கேலிக் கூத்தல்லவா? சென்ற யுத்தம் நடைபெற்றபோது அந்நிய அதிகார வர்க்கம் இங்குள்ள மக்களைக் கசக்கிப் பிழிந்து பணம் சேர்த்ததைப்போல, ஒரு குரூரமான முறையைக் காப்பியடிக்க வேண்டுமென்பதுதான் அபாயகரமான யோசனை!"

— "மித்திரன்"

அங்கிருந்தும் பாய்கிறது அம்பு!

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத் தயாரிப்பானது, திட்டச் செலவின் அளவைக் கொண்டுதான் நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாறு செய்தது, அடிப்படையான தவறாகும்! இந்த மகத்தான தவறின் காரணத்தினாலேதான் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் நேரத்திலே அதிர்ச்சிகரமான தடுமாற்றமும் உண்டாகியது!...

"ஆகவே மூன்றாவது திட்டத்தின் அளவை நிர்ணயிப்பதற்கு முன்பாக, நாம் தெளிவான முடிவுக்கு வந்தாக வேண்டும். அபிவிருத்திக்கான செலவின் விகிதம் முக்கியமானதல்ல; செலவு செய்கின்றதன் நோக்கமென்ன என்பதும், விரும்பப்பட்ட விளைவு அதனால் ஏற்படுகிறதா என்பதுமே முக்கியமானவை. ஆனால், திட்ட முறைக்கே தவறான வழி ஒன்றை, திட்டக் கமிஷன் காட்டியுள்ளது...

"மூன்றாவது திட்டத்தின் அளவென்ன என்பதோ, அதன் குறிக்கோளென்ன என்பதன் விளக்கமோ தெரியாத நிலையிலே, மூன்றாவது திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கு அவசியமான வரி முறைகளைப் பற்றிய செய்தி விசித்திரமாகும்!

"ஒவ்வொரு ஆட்சித் துறையிலும் கடுமையான முறையிலே சிக்கனத்தைக் கையாள்வோமேயானால், புதிய வரி போட அவசியமே இருக்காது!"

— "இந்து"

3

வீட்டுக்குள் நுழைந்ததும் காரிக்கண்ணனருக்குத் தூக்கி வாரிப் போட்டது. திரும்பிய பக்கமெல்லாம் ஒரே அலங்கோலம்! எப்போதும் எதிர்வந்து இன்முகங் காட்டி அழைத்திடும் முத்துநகையையும் காணவில்லை. அச்சமூட்டிடும் அந்த அமைதியை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"முத்துநகை! முத்துநகை!!" என்று கூவினர். கூவியவர் திடீரெனக் கூச்சலே போட்டு விட்டார். "அம்மா முத்துநகை!" என அலறியவாறு அவள் வீழ்ந்து கிடந்த இடத்திற்குப் பாய்ந்தோடினர். மயக்கத்தின் அணைப்பில் மெய்மறந்து கிடந்த மகளைத் தூக்கி மடியில் கிடத்திக் கொண்டு தழுதழுத்த குரலில் "அம்மா! அம்மா!" என அழைத்துப் பார்த்தார். தண்ணீரை அள்ளி அவள் முகத்தில் தெளித்தார். தாமரையிலையின் மேலே விழுந்த தண்ணீர் முத்துருவாய் கொண்டு உருள்வதுபோல அவள் முகத்தில் நீர்த் துளிகள் உருண்டோடிக் கொண்டிருந்தன. தன் மேலங்கியின் முனையிலுள்ள காப்புக் கரையைக் கிழித்துத் திரிபோலக் கையால் சுற்றி, விளக்கில் காட்டிக் கொளுத்தித் திரும்ப அணைத்து, அந்தப் புகையை முத்துநகையின் மூக்கில் செலுத்தினர்.

இப்படிப் பலதடவை அந்தப் புகை சிகிச்சை அளிக்கப்பட்ட பிறகு முத்துநகையின் தலை மெதுவாக அசைந்தது. கடற் சிப்பி, தானே திறந்து ஒளி முத்தை வெளியே காட்டினர்போல அவள் கண் இமைகள் திறந்தன...கருவிழிகள் மெதுவாக ஆடின.

"அப்பா!" என்ருள் நடுங்குங் குரலில்!

"என்னம்மா நடந்தது; என் கண்ணே?" என்று அழுகுரலில் கேட்டார் புலவர்.

அவளால் பேசமுடியவில்லை. சுற்று முற்றும் கண்களைச் சுழல விட்டாள். திடுமென எழுந்து உட்கார்ந்தாள். "அவரைக் கொண்டுபோய் விட்டார்களா?" என்று வேதனையோடு கேட்டாள். தேம்பித் தேம்பி அழுதாள்.

"சொல்லம்மா! விபரமாகச் சொல்லம்மா! எனக்கு ஒன்றுமே புரியவில்லையே...அய்யோ! நீ விழ்ந்து கிடந்ததைக் கண்டபோது நான் கற்ற தமிழ் இலக்கணமெல்லாம் திடீரென மறந்துவிட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டதம்மா எனக்கு! சொல்லம்மா - என்ன நடந்தது? செழியன் எங்கே?"

புலவர், இந்தக் கேள்விக்கு மகளிடமிருந்து என்ன பதில் வருமோ என்று பயந்தார். ஒருவேளை, செழியனைப் பகைவர்கள் பழிக்குப் பழி தீர்த்துவிட்டார்களோ என்ற ஐயம் அவரை அலைக்கழித்தது.

"வழக்கம்போல் சிவனடியார்கள் தெருவில் வரும் ஒலி கேட்டது. கதவு மூடியிருந்தால், நாம் மதிக்கவில்லையென்று அடியார்கள் தவருகக் கருதுவார்களே என்று பயந்து, ஓடிப் போய்க் கதவைத் திறந்தேன். அவர்களோ 'குபு குபு' வென வீட்டுக்குள் நுழைந்தார்கள். செழியனைத் தூக்கிக் கொண்டு தூக்கிச் செல்ல முயன்றுர்கள். நான் தடுத்திட முயன்றேன். என்முகத்தில் ஏதோ ஒரு பச்சிலைக் கொத்தைக் காட்டினர்கள். அவ்வளவு

★ யவனக் கிழவன் ★

தான்; எனக்குத் தலை சுற்றியது. மயக்கம் ஏற்படுவதை என்னல் உணர முடிந்தது. நிற்க முடியவில்லை...உட்கார்ந்தேன். அதற்குள் அவரைத் தூக்கிக்கொண்டு அந்த அடியார்கள் ஓட்டம் பிடித்தார்கள். நான் வேகமாக எழுந்தேன். தடாலென விழுந்தேன். பிறகு எதுவும் தெரியாது..."

இந்தப் பதிலை முத்துநகை சொல்லி முடித்ததும் புலவர் காரிக்கண்ணனருக்குப் புதிய குழப்பம் மூண்டது. உடனே ஓடிப் போய சோழன் கரிகாலனிடமும் பெருவழுதிப் பாண்டியனிடமும் செய்தியைச் சொல்ல வேண்டும் என்று எண்ணியெழுந்தார். "அரண்மனைக்குப் போய் உடனே அரசர்களுக்குத் தகவல் கொடுத்து வருகிறேன்" என்று மகளிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டார்.

ஆனல் புறப்பட்டவர் வாயிற்படி தாண்டாமல் திரும்பி வந்து திகைத்து நின்ருர்.

"ஏனப்பா திரும்பிவிட்டீர்கள்?" என்று முத்துநகை ஆவல் ததும்பக் கேட்டாள.

"ஒன்றுமில்லை. முதலில் செழியனைக் காணவில்லையென்று அரண்மனையில் மன்னர்களிடம் செய்தி வந்தது. அப்போது நானும் அங்கேயிருந்தேன். செழியன் நம் வீட்டில் இருக்கும் செய்தியைக் கூறிவிடலாம் என்று நினைத்தேன். ஆனல் செழியனின் வேண்டுகோள் என் நெஞ்சிலே நின்றது. அவன் சொன்னதை மீறி செய்தியை வெளியிடுவானேன் — என்று மௌனமாயிருந்து விட்டேன். இப்போது போய், செழியனை யாரோ தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள் என்று நான் கூறினல், முதலில் செழியன் இங்கு இருந்ததை ஏன் சொல்லவில்லையென்று கேட்பார்கள். பாண்டியராவது பரவாயில்லை — கரிகால் மன்னரிடம் யாரம்மா பதில் சொல்ல முடியும்? மன்னரின் கேள்வியும் நியாயமாகத்தான் இருக்கும். நான் செழியன் இருக்குமிடத்தை முன்பே கூறியிருந்தால் இப்போது செழியனுக்கு இந்த ஆபத்து வந்திருக்காதல்லவா? தவறு என்மீது தானே!" —எனத் தன்னைத் தானே நொந்து கொண்டார் புலவர்.

"உங்கள்மீது தவறொன்றுமில்லையப்பா; தவறு செழியனுடையதுதான்! மன்னர்களிடம் தகவல் கொடுக்க வேண்டாமென்று முதலில் தடுத்தது அவர் தானே!" எனத் தந்தைக்குச் சமாதானங் கூறினுள் முத்துநகை.

"செழியனைத் தூக்கிச் சென்றவர்கள் யாராக இருக்கும்? வேளிர் குடி மன்னவன் இருங்கோவேளின் ஆட்களாகத்தான் இருக்க வேண்டும் தோல்வியுற்ற அவமானத்தில் எப்படியும் சோழப் பெருநாட்டில் அமளியை உருவாக்க வேண்டுமென்று எண்ணுகிருன் போலும்!" என்றெல்லாம் புலவர் முனகிக் கொண்டிருந்தார்.

"இருங்கோவேள் மன்னன் கரிகாலரிடம் தோற்று நாடிழந்து நகரிழந்து எங்கேயோ தலைமறைவாக வாழுகிருன் என்று கூறினர்களேயப்பா; இப்போது அவனிடம் இத்தனை ஆட்கள் ஏது?" என்று சந்தேகத்துடன் வினவினுள் முத்துநகை.

"நாடற்றவர்களைக் காடு காப்பாற்றுகிறது! அந்தக் காட்டின் புதர்களில் புலியும் பதுங்கியிருக்கும்—இந்த வேளிர் குடும்பத்து எலியும் ஒளிந்திருக்கும். குகைகளில் சிங்கம் படுத்திருக்கும்—அங்கே பகை வளர்க்கும் இந்தச் சிறு நரியும் ஒண்டிக் கிடக்கும். அந்த நரிக்கு மீண்டும் நாட்டாண்மை கொடுக்கவும், நமது காவலராம் கரிகாலரை வீழ்த்திவிடவும் உள் நாட்டிலேயே ஒரு சில துரோகிகள் உலவிக் கொண்டிருக்கிருர்கள்! அவர்களின் கூட்டு முயற்சியாகத் தானிருக்கவேண்டும் இன்றைய தினம் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும்!" என்று, காரிக்கண்ணனர் விழிகளில் கனல் பறக்கப் பேசினர்.

"செழியனின் உயிருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டால் என்னப்பா செய்வது?"

"அதைத்தான் நானும் கவலையோடு யோசிக்கிறேன்" என்று கூறியவாறு பூமியில் விழியோட்டிச் சிந்தனையில் ஈடுபட்டார் புலவர், சிந்தனைக்கெனச் சென்ற விழிகள், செழியன் படுத்திருந்த கட்டிலின் ஓரமாக ஏதோ ஒன்றைக் கண்டு மேலும் அகல விரிந்தன. புலவர் வேகமாகச் சென்று அந்தப் பொருளை எடுத்தார். புலிநகம் பொருத்தப்பட்ட மாலை! வேலைப்பாடமைந்த அழகிய தங்கத் தகட்டாலான அந்த மாலையின் முனையில் புலி நகங்கள் நீட்டிக் கொண்டிருந்தன. மாலையை உற்றுப் பார்த்தார்.

"இது செழியன் தன் கழுத்தில் அணிந்திருந்ததுதான்!" என்று அடையாளங் கண்டுபிடித்துச் சொன்னுள் முத்துநகை.

புலிநக மாலையைத் திரும்பத் திரும்ப உற்று நோக்கினர் புலவர். பிறகு அதை முத்துநகையிடம் கொடுத்துப் பத்திரமாகப் பேழையில் வைத்துப் பூட்டச் சொன்னர். முத்துநகையும் அந்தப் புலிநக ஆரத்தை அன்போடு நோக்கினுள். ஆனல் அவள் பார்வைக்குத் திரையிட்டது கண்ணீர்!

மாலையைக் கொண்டு போய்ப் பேழையில் வைத்துப் பூட்டினுள். அவளுக்கு எப்படியாவது செழியனை மீட்டுவிட வேண்டும் என்ற

மு. கருணாநிதி

மு. கருணாநிதி

எம். எல். ஏ.

ஜூன் மாத நிகழ்ச்சிகள்

***

ஜூன்

5	தர்மபுரி 'உதய சூரியன்'—நாடகம்
7	சென்னை காலை—மயிலை திருமணம் மாலை—கொத்தவால்சாவடி கூட்டம்
10	சென்னை—இராயபுரம்
11	சென்னை 25-வது வட்டம் [டாக்டர் தருமாம்பாள், பி. பாலசுப்மணியம் — இரங்கற் கூட்டம்]
14	குடியாத்தம்
15	சத்தரவாடி (சித்தூர்)
20, 21	திருச்சி மாநாடு
22	காலை அம்மனூர்—திருமணம்
23 முதல் 28 முடிய	ஆறு நாட்கள் குளித்தலைத் தொகுதி

துடிப்பு! சிறிது நேரந்தான் அவனுடன் அவள் பழகினாள். அந்த நேரத்திற்குள் அவன மிகவும் உயர்ந்த பண்பாடு கொண்டவன் என்பதை உணர்ந்து கொண்டாள். தன்னந் தனிமையில் ஓர் அழகான பெண்ணும் ஒரு வாலிபனும் விடப்படும் சூழ்நிலையில் எவ்வளவோ விபரீதங்கள் காதல் என்ற பெயரால் அரும்பிப் பூத்துக் காய்த்துக் கனிந்து போயிருக்கின்றன. அதுவும் இருவரில் ஒருவருக்குக் காயமோ பிணியோ ஏற்பட்டு சிகிச்சை செய்யும் கட்டங்கள் ஏற்பட்டுவிடுமேயானால் அந்த இடத்தில் காதல் எனும் புதிய நோய் தங்கு தடையின்றி—உள்ளத்தில் நுழைந்து, உடலுக்கு வராமல், முதலிலேயே உடலில் பரவி பிறகு உள்ளத்தையும் பற்றிக் கொள்ளும்.

ஆனால் அதே சூழ்நிலையில் விடப்பட்ட செழியன, தனக்கு அன்புடன் சிகிச்சைகள் செய்து உபசரித்த முத்துநகையிடம் எந்த விதமான தவறான குறிப்புகளும் காட்டவில்லை. அந்த மேன்மையான குணத்தை முத்துநகை பெரிதும் பாராட்டி மகிழ்ந்திருந்தாள். அந்தப் பண்பினைக் கண்டு அவன்மீது மிக்க மதிப்பு வைத்தாள. அதனாலேயே அவனுக்கேற்பட்ட ஆபத்திலிருந்து எவ்வாறேனும் காப்பாற்றிவிட வேண்டும் என்று தவித்தாள். மறுபடியும் தந்தையிடம் செழியனைக் காப்பாற்றுவதற்கு வழி காண வேண்டும் என்று வற்புறுத்தினாள்.

புலவர் புனுகுப் பூனைபோல அங்கு மிங்கும் நடைபோட்டுக் கொண்டு ஆழ்ந்து யோசிக்கத் தொடங்கினார். விழா நாளும் அதுவுமாக இஃதென்ன புதிய வேதனை யென்று நொந்து கொண்டார்.

கடைசியாக முத்துநகையைப் பார்த்து, "கவலைப்படாதே! செழியனைப் பற்றிய தகவலை மன்னனுக்கு அறிவிக்க நான் ஒரு குறுக்கு வழி கண்டுபிடித்திருக்கிறேன். நம்மீது குற்றமில்லாமல் செய்தி மன்னனின் செவியில் எட்டிவிடும்!" என்றார்.

"என்னப்பா வழி?" என்றாள் முத்துநகை.

"விபரமெல்லாம் கேட்கக் கூடாது! இனி நீ கவலைப்படாமல் தூங்கலாம்!" எனச் சற்றுக் குரலை உயர்த்திப் பேசினார்.

"இரண்டு மன்னர்களில் எந்த மன்னரிடம் செய்தியை அறிவிக்கப் போகிறீர்கள்? பாண்டியரிடமா? சோழரிடமா?"

"யாரிட மென்றால் உனக்கென்ன? செழியன் மீள வேண்டும்—அவ்வளவுதானே?"

"இல்லையப்பா; அதற்கில்லை! யாரிடமென்று விபரமறியக் கேட்டேன்; அவ்வளவுதான்!"

"அடடா உன் தொல்லை—பெரிய தொல்லை!... முத்துநகை! உண்பதற்கு ஏதாவது இருந்தால் கொடு! பிறகு உறங்கு; போ!"

திடீரெனத் தந்தையின் பேச்சில் தலைகாட்டும் கடுமைக்குக் காரணம் புரிந்து கொள்ள முடியவில்லை, முத்துநகையினால்!

இருங்கோவேள் இப்படியெல்லாம் மறைந்திருந்து நாட்டில் குழப்பங்களை உண்டு பண்ணுகிறானே யென்று தந்தைக்கு உள்ளத்தில் குடைச்சல் ஏற்பட்டிருக்கக் கூடும். அல்லது, செழியனைப் பற்றிய சேதியை முதலில் வெளியிடாமல் இப்போது வெளியிட்டால் மன்னர் என்ன கருதுவாரோ என்ற கவலை மனதைத் துளைத்திடக் கூடும். அதனால் தந்தையின் பேச்சில் படபடப்பு இருக்கிறதோ என்று முத்துநகை நினைத்தாள். அவளுக்கு வேறொரு பயமும் வந்துவிட்டது. அடிக்கடி செழியன் காப்பாற்றப்பட வேண்டும் என்பதையே வலியுறுத்திக் கூறுவதால் ஒருவேளை தந்தை தன்னைப் பற்றித் தவறாகக் கருதியிருக்கக்கூடுமோ என்ற அச்சந்தான் அது!

ஆகவே அவள் பேசுவதை நிறுத்திக் கொண்டாள். அடுக்களைக்குச் சென்று பழங்களையும் பாலையும் எடுத்து வந்து தந்தைக்கு முன்னே வைத்தாள். அவரும் பழந்தின்று பாலைப் பருகினார். அதுவரையில் வைத்த விழி வாங்காமல் முத்துநகை தந்தையின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். தன் மகள் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் காரிக்கண்ணனார் உணராமல் இல்லை. உணவை முடித்துக்கொண்டு எழுந்து, தெருக் கதவைத் தாளிட்டு விட்டுப் படுக்கையில் சாய்ந்துகொண்டார்.

முத்துநகைக்கு ஒன்றுமே விளங்கவில்லை. செழியனைப்பற்றி மன்னருக்குச் சேதி அனுப்ப வழி கண்டு பிடித்துவிட்டேன என்று கூறியவர், உறங்குவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டு விட்டாரே யென்ற கவலை அவளை வாட்டியது. படுக்காமல் உட்கார்ந்திருந்தால் தந்தையின் மனத்தில் மேலும் அமைதியற்ற நிலையை உண்டாக்கிவிடக்கூடும் என அஞ்சி, அவளும் தாழ்வாரத்தில் தலைசாய்த்துக்கொண்டாள். சிறிது நேரத்திற்கெல்லாம் புலவர் உறங்குகிறார் என்பதற்கு அடையாளமாக விதவிதமான மூச்சுகள் ஒலி யெழுப்பிடத் தொடங்கின. முத்துநகைக்குத் தூக்கமே வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள்.

செழியனை எங்கே கொண்டு போயிருப்பார்களோ? என்ன செய்திருப்பார்களோ?

எல்லாம் தன்னால் வந்த வினைதான்! சிவனடியார்களுக்கு மரியாதை செலுத்துவதற்காகக் கதவைத் திறக்காமல் இருந்திருந்தால் இப்படியெல்லாம் ஆகியிருக்குமா?

—இவ்வாறு கவலைப்பட்டுக் கொண்டே அந்தப் பூங்கொடியாள் துவண்டு போனாள். நாழிகைகள் உருண்டோடி நடுநிசியாயிற்று. எங்கும் பயங்கரமான அமைதி! அரண்மனையின் மணியோசை நடுநிசி யென்பதை அறிவித்து விட்டு ஓய்ந்து போனது. பூம்புகார்க் கடற்கரையின் கலங்கரை விளக்கம் சுழலும்போது அவள் வீட்டு முற்றத்தின் வழியாகப் "பளிச்; பளிச்" என்று ஒளிபட்டு மறைந்து கொண்டிருந்ததானது அவளது மனோநிலைக்குத் தக்க எடுத்துக் காட்டாய் அமைந்திருந்தது.

இருண்டிருந்த வீட்டுக்குள் யாரோ விளக்கு ஏற்றுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள். புலவர்தான் விளக்கைக் கொளுத்தி வைத்தார். முத்துநகை கவனித்துக் கொண்டேயிருந்தாள். விளக்கின் அடியில் அமர்ந்து புலவர், ஓலைச்சுவடிகளைக் கையிலெடுத்து எழுத்தாணியை ஓட்டத் துவங்கினார். அவர் எழுதிக் கொண்டிருப்பது எதுவாக இருக்கும் என்ற சந்தேகம் முத்துநகைக்கு! ஏதாவது கவிதையாக இருக்கும் என்று அவளே பதில் கூறிக்கொண்டாள்.

அப்போது தெருக் கதவு மெள்ளத் தட்டப்படும் ஒலி கேட்டது! முத்துநகை எழுந்து தெருக் கதவின் பக்கம் ஓடினாள்.

"நில்! நீ போகாதே! நான் திறக்கிறேன்!" என்றவாறு புலவர் எழுத்தாணியைக் கையில் எடுத்துக் கொண்டே கதவுப் பக்கம் வந்தார். எதிரிகள் யாராவது இருந்தால் தற்காப்புக்காக எழுத்தாணியைக் கையில் வைத்துக் கொண்டார் என்பது அவர் அதைப் பிடித்திருந்த பாவனையிலேயே தெளிவாகத் தெரிந்தது.

கதவு திறக்கப்பட்டது. தாடியும் மீசையுங் கொண்டு தண்டூன்றியவாறு ஒரு கிழவர் உள்ளே வந்தார். நீண்ட கருநீல அங்கியொன்றை அவர் அணிந்திருந்தார். அதன்மீது பூவேலை செய்யப்பட்ட மேலாடையொன்று கிடந்தது. சிவப்பு வர்ணமுள்ள பட்டுத் துணி யொன்று தலையைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது.

அந்தக் கிழவர், "என்ன புலவரே; சுகமா?" என்று கேட்டவாறு உள்ளே வந்தார்.

அந்தக் கிழவரை முத்துநகை இதற்கு முன்பு பார்த்திருக்கிறாள். அவரோடு பேசியுமிருக்கிறாள். அவர் ஒரு யவன நாட்டுக்காரர் என்றும், பெரிய வாணிப வேந்தர் என்றும், தன்பால் மிக்க அன்பு கொண்டவர் என்றும் காரிக்கண்ணனார் முத்துநகையிடம் கூறியிருக்கிறார். கிழவரை அவளும் வணங்கி வரவேற்றாள்.

அக் கிழவர், முத்துநகையிடம் நெருங்கி வந்து, "சுகமாக இருக்கிறாயா பெண்ணே?" என்று அவள் தலையை அன்போடு தடவிக் கொண்டே கேட்டார்.

"சுகந்தான் தாத்தா! ஏது, இந்நேரத்தில வந்தீர்கள்?" என்று முத்துநகை அவரைப் பார்த்துக் கேட்டாள்.

"ஏதாவது வேலையிருந்திருக்கும்; வந்திருப்பார். இதெல்லாம் ஒரு கேள்வியா? முத்து! நீ போய்ப் படுத்துத் தூங்குபோ!" என்று புலவர் கூறவே அவளும் தன் படுக்கையிடம் சென்று விட்டாள்.

பிறகு கிழவரும் புலவரும் வெகு நேரம் வரையில் ஏதோ ரகசியம் பேசிக் கொண்டிருந்தனர். என்ன பேசுகிறார்கள் என்பதை எப்படியாவது கேட்டுவிட வேண்டும் என்று பெருமுயற்சி செய்தாள் முத்துநகை. காதைக் கூர்மையாக்கிக் கொண்டு ஒலி வரும் திக்கில் நீட்டிக்கொண்டிருந்தாள். "சோழநாடு", 'பாண்டிய மண்டிலம்", "வேளிர் குடி மக்கள்" இப்படிச் சிதறிய சில வார்த்தைகளைத்தான் அவளால் கேட்க முடிந்தது. 'செழியன்" என்ற சொல்லும் சில நேரங்களில் பேசப்பட்டது. அப்போது அந்த வாசகத்தின் முழு உருவையும் பெற அவள் பட்டபாடு கொஞ்சமல்ல. ஆனாலும் பயனில்லாது போயிற்று.

இறுதியாக யவனக் கிழவர் விடைபெற்றுக் கொண்டு எழுந்தார். புலவர், ஓலைச்சுவடியிலிருந்து இரண்டு மூன்று ஓலைகளை எடுத்துக் கிழவரிடம் கொடுத்தார். அவர் அவைகளை வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்டார்.

கிழவர் மெதுவாக வாயிற்படியைத் தாண்டி நடந்தார். புலவரும் தெருவரையில் சென்று அவரை வழியனுப்பி வைத்தார். தெருவில் நின்று ஏதாவது பேசுகிறார்களா என்று கவனிக்க முத்துநகை கதவோரத்திற்குப் போனாள். போனவளின் காலில் கதவோரத்தில் ஏதோ ஒன்று தட்டுப்பட்டது. குனிந்தெடுத்து விளக்கருகே சென்று பார்த்தாள். ஒரு சிறு பதக்கம்! சுற்றிலும் வைரம் பதித்த பதக்கம். அதன் நடுவே உள்ள எழுத்துக்கள் அவள் பார்வையை இழுத்தன. கூர்ந்து கவனித்தாள். "இருங்கோவேள்" என்று எழுதப்பட்டிருந்தது. அவள் கண்களை அவளால் நம்ப முடியவில்லை. திரும்பத் திரும்பப் படித்தாள். அதே எழுத்துக்கள்தான். அவளுக்காக அவை மாறவில்லை.

"இருங்கோவேள் மன்னனா? இந்த நாட்டின் பகைவனா? அப்படியானால் இது யவனக் கிழவர் இல்லையா? அய்யோ—பகைவனுடனா தந்தை உறவு கொண்டாடுகிறார்?"

கேள்விகள் அவள் நெஞ்சத்தைத் துளைத்துத் தகர்த்தன. பதக்கத்தை மறைத்துக்கொண்டு படுக்கையில் போய் சாய்ந்து கொண்டாள்.

புலவரும் கிழவரை அனுப்பி விட்டுக் கதவைத் தாளிட்டுவிட்டுப் படுத்துறங்க ஆரம்பித்தார்.

(தொடரும்)

அறிவிப்பு

★

எனது 'எழுத்தாளன் காதலி' நாடகத்தை அமெச்சூர் நாடக மன்றங்களும், தொழில்முறை நாடக மன்றங்களும் என்னுடைய அனுமதியின்றிப் பலஇடங்களில் நடத்தி வருவதைப் பத்திரிகை விமர்சனங்கள் மூலமாகவும், நண்பர்கள் மூலமாகவும் அறிகிறேன். அப்படிச் செய்வது சட்ட விரோதம் என்பதையும், எழுத்து மூலம் அனுமதி பெறாமல் நடிப்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதையும் இதன் மூலம் அறிவிக்கிறேன்.

அன்பன்,

பி. சி. கணேசன்

நில் நண்பா...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

யின் காங்கிரஸ் நிர்வாகம்! இந்த நகரத்து மக்கள் தந்த ஆயிரங்கள் இருபதை இருந்த இடம் தெரியாமல் 'மாயம்' கலந்த ஊழலுக்கு இரையாக்கி விட்டார்கள், ஊராள வந்தவர்கள்!

காங் : என்ன?...என்ன?

தி. மு. க : இது போலத்தான் திகைத்துக் கேட்கிறது சென்னையும், சென்னையை உன்னிப்பாகக் கவனிக்கும் தமிழகமும்! கார்ப்பரேஷன் பள்ளிகள், அலுவலகங்கள் — இவற்றின் உபயோகத்திற்காக மேசை, நாற்காலிகள் தேவைப்பட்டதாம், காங்கிரஸ் நிர்வாகத்தின் போது. உடனே 'டெண்டரும்' கோரினார்களாம்! ஆனால், என்ன 'இரகசிய உடன்பாடோ' தெரியவில்லை; முப்பதாயிரம் ரூபாய்க்கு டெண்டர் போட்டு, ஐம்பத்து மூவாயிரத்துக்கு வியாபாரம் பேசி முடித்தார்களாம்! இருபதினாயிரம் ரூபாயை முன்பணமாகவும் கொடுத்துவிட்டார்களாம்! போகப் போக இந்த வியாபாரம் ஒரு வழியாக முடிந்த நேரத்தில்தான் கண்டு பிடிக்கப்பட்டது, ரூபாய் இருபதினாயிரம் வரம்பு மீறி பாழாக்கப்பட்டுவிட்ட கொடுமை!

காங்: அதற்கு வேறு ஏதேனும் காரணம் இருக்கலாம்!

தி. மு. க: காங்கிரஸ் நிர்வாகம் நடத்தியது என்பதைத் தவிர வேறு காரணம் இல்லை, தோழனே! இதை நாங்களா சொல்லுகிறோம்? விசாரணைகளை நடத்திய கணக்காளரே சொல்லி விட்டார், அந்த ஊழலுக்குக் காரணமான பழைய நகரசபைக் கல்விக் குழுவும், வரி நிதிக் குழுவும்தான் இந்தத் தொகையைத் தரவேண்டுமென்று! இருபதினாயிரம் ரூபாய் பாழானதற்கு நீங்கள் தான் காரணம்; அதை ஈடு செய்ய ஆவன செய்ய வேண்டும்—என்று ஆணை பிறப்பிக்கவும் பட்டிருக்கிறதாம், இந்த இரு குழுக்களிலும் இருந்த காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு! முன்னாள் நகரசபைத் தலைவர் ராதாகிருஷ்ணபிள்ளை, துணைத் தலைவர் ராமதாஸ், சட்ட மன்ற உறுப்பினர் ராஜம் ராமசாமி, மேல்சபை உறுப்பினர் சரஸ்வதி பாண்டுரெங்கம்—ஆகியவர்களுக்கும் 'நோட்டீஸ்' அனுப்பப்பட்டிருக்கிறதாம்!

காங்: அதிகமாகப் பேசி எனக்கு மயக்கத்தை உண்டு பண்ணுதே!

தி. மு. க: உன்னைப் போன்றோரின் மயக்கம் தெளியத்தான் வேண்டும் என்பதற்காகத்தான், மனிதகுலம் மன்னிக்காத இந்த மாபாதகச் செயல்களை எடுத்துப் பேசுகிறோம்!

காங்: தி. மு. கழகத்தின் தொண்டால் இத்தகைய கொடியவர்களை நாட்டுக்கு அறிமுகப் படுத்துவது மட்டும்தான் முடியுமா?

தி. மு. க: தவறு நண்பனே! முன்பே சொன்னேனே; நகரம் வாழ—நலிவு போக எடுத்துக் கொள்ளவேண்டிய பணிகளில் இதுவும் ஒன்று என்று! என்னிடம் கேட்பதில் பயனில்லை; நகரத்திலே சென்று கேள்; மக்களுடைய மனதைத் தொட்டுப் பார்; அவை சொல்லும் ஆயிரம் கதைகளை!

"காரில் பறக்கும் கனவான்களைத்தான் மேயராகக் கண்டிருக்கிறோம் நாங்கள்; ஆனால், குஷ்டரோகியும் கால் வைக்கப் பயப்படும் எங்கள் குடிசைக்குள்ளே நுழையும் அரசுகூட ஒரு மேயரா?" என்று ஆச்சரியப்படுகிறார்கள், சேரியிலே வசிக்கின்ற இலட்சோப இலட்சம் மக்கள்!

"வந்தேமாதரம்! ஜெய்ஹிந்த்!!" என்ற சொற்களைத்தான் மேயர்கள் பேசக் கேட்டிருக்கிறோம்! இன்று எங்களைத் தேடிவந்து, சொல்லுகின்ற குறைகளை மணிக் கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கும் ஒரு சகோதரனை — 'ஆவன செய்ய முயற்சிக்கிறேன்' என்று ஆறுதல் சொல்லும் உடன் பிறவா உத்தமத் தம்பியைச் சந்திக்கிறோம்!" என்று பூரிப்போடு சொல்லுகின்றது, ஏழையர் சமுதாயம்!

வெற்றிபெற்ற தி. மு. கழக நகரசபை உறுப்பினர்கள் மட்டுமல்ல; தோற்றுப்போனவர்கள் கூட வீடு வீடாக ஏறி இறங்குகிறார்கள், குறைகளைக் கேட்கிறார்கள்; நகரசபை அதிகாரிகளோடுபோராடுகிறார்கள்—நகரம் இன்று சந்திக்கின்ற காட்சிகளப்பா இவைகள்!

காங்: அப்படியா? என் வீட்டிலே கூட கொசுத் தொல்லை உண்டு; தண்ணீர் சரிவர வருவது கிடையாது!

தி. மு. க : அதற்காக உன்னைப் பழிவாங்கிவிடும் இந்த பகுத்தறிவு இயக்கம் என்று பயப்படாதே! எங்கள் தொண்டன் வருவான் உன் வீடு நோக்கி; நீ வெட்கப்படாமல் விபரத்தைச் சொல்! நீ மேடையிலே தீயைக் கக்கினாயே; அதனால் அவன் துரோகியாகிவிடமாட்டான்! நீ காறி உமிழ்ந்தாயே; அதனால் அவன் கடமை தவறிவிடமாட்டான்! நீ அவனையே கொலைபுரிய வந்தால்கூட ஒளி அமைத்துக் கொடுப்பான், இந்த நகரத்தின் புதிய காவலன்! ....ஏன் ... ஏன் .... என்ன இது? ஏன் இப்படி என்னைப் பார்க்கிறாய்? ஏன் புறப்படுகிறாய்?...

நில் நண்பா; எங்கே ஓடுகிறாய்?



நூலேணி

அனுபவ தையற்கலை

ஆ. சுகுமாறன்

கண்டு, கேட்டுப் பழகி வந்த தையற்கலை, படித்தறிந்து முன்னேறும் அளவிற்கு வந்திருக்கிறது. இதற்குக் காரணம் ஆர்வமுள்ள சிலரின் தொண்டாகும். அத்தகையோர்களில்ஒருவராகத் திகழ்கிறார், இந் நூலின் ஆசிரியர் ஆ. சுகுமாறன்.

அவருடைய ஆர்வம் ஆற்றொழுக்கான தமிழ் நடையில் பளிச்சிடுகிறது. அழகு தமிழ்ச் சொற்கள்—பழகு தமிழ் சொற்கள் ஆகியவற்றை மணிகளிடையே பவளங்களாகக் கலந்து நூலில் பயன்படுத்தியிருக்கிறார்.

தையற் கலைஞன் மனிதனின் உடற்கூறு, உடல் அமைப்பு இவைகளை அவ்வளவு நுணுக்கமாகத் தெரிந்து கொள்ளாவிடினும், சிறிதளவாவது தெரிந்திருக்க வேண்டும். அத் தேவையான அறிவைப் பெற இப்புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமும் துணை செய்கிறது.

நம் நாட்டிற்குப் புதிதான ஜியோமீதி முறையை விளக்கியிருப்பது இப் புத்தகத்தின் நல்ல முயற்சிகளில் ஒன்று.

தையற் கலைஞர்கள் மட்டுமில்லாது மற்றவர்கள் சுவையோடு படிக்கத் தகும் புத்தகம் இது; பயனுள்ளது; பாராட்டப்பட வேண்டியது!

[கிடைக்குமிடம்: தேனருவிப்பதிப்பகம்,சென்னை-17. விலை ரூ.3. பக்கங்கள்: 102]

மௌனத் தியாகி

ஆர். எஸ். ஜேக்கப்

தொழிலாளர் இயக்கத்தை ஒட்டிய கதைகள்—உழவர் வாழ்க்கையை நிலைக்களனாக வைத்தெழுதும் கதைகள் — இவற்றில் எழுத்திலும், கதையோட்டத்திலும் ஏதோ ஒரு வரட்சியை ஊட்டி விடுவார்கள், சில எழுத்தாளர்கள்.

ஆனால், இந்த நூலில் மேற்கூறிய 'வரட்சி' குறைக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் 'கட்சி வாடை' வீசுகிறது.

பெரும்பாலும் மொழிபெயர்ப்புக் கதைகளே உள்ளடங்கியிருக்கிற இக் கதைத் தொகுப்பில் ஆசிரியரின் சொந்தக் கதைகளில் கற்பனை வளத்தை அதிகமாகக் காணோம்!

முதல் இரண்டு கதைகளில் எழுத்து லாவகமாகக் கையாளப்படுகிறது. சிங்களத்தில் நடந்ததாக ஆசிரியரால் கூறப்படும் கதையில் அவசியமற்ற 'கட்சிகள்' 'காட்சிகள்' சர்வ தேசியத் தத்துவங்கள்' நடமாடுவதைக் குறைத்திருக்கலாம்.

பாதுஷாவின் நீதி, கைக்கிள் வண்டி—ஆகிய கதைகள்தான் இத்தொகுதிக்கே உயிர் தருபவை. அவைகள் படிப்பதற்கும், நினைப்பதற்கும் இடம் தருகின்றன.

பொதுவாக இக்கதைக் கொத்தில் ஒரே வாடை வீசும் பூக்கள் தான் அதிகம்; இருந்தாலும் ஒன்றிரண்டு சில நேரங்களில் நல்ல மணம் வீசுகிறது.

[கிடைக்குமிடம்: சமாதானப் பதிப்பகம், பாளையங்கோட்டை. பக்கங்கள்: 90. விலை: ரூபாய் ஒன்று.]

அறிஞர் அண்ணாவின் ★ ★ எண்ணக் கருவூலம்!

கலையுலகில் கருத்துப் புரட்சிக்கு வித்தூன்றி—அழகு தமிழும், ஆழமான சொல் நயமும் கொண்ட வசனம் அமைத்து —புதுத் திருப்பம் ஒன்றையே உருவாக்கிய அறிஞர் அண்ணா அவர்களின் கருத்தோவியம் ஒன்று மறுபடியும் திரைப்படமாக வர இருக்கிறது என்ற தித்திப்பான செய்தி இப்போது கிடைத்திருக்கிறது. அப்படி ஒரு விருந்தையே எதிர்பார்த்திருந்த தமிழகம் உவகையோடும், உற்சாகத்தோடும் இந்தச் செய்தியை வரவேற்கிறது.

"அவரே என் தெய்வம்' என்ற புதுமையான தலைப்போடு, அருமையான சம்பவங்களின் கோர்வையாகக் கதையை உருவாக்கியிருக்கிறார்களாம், அண்ணா அவர்கள். அதைத் திரைப்படமாக்கும் பணியை எடுத்துக் கொண்டிருப்பவர்கள் அரசு பிக்சர்சார். அதன் அதிபரான திரு. ப. நீலகண்டன் அவர்களே டைரக்ட் செய்யப் போகிறார்.

மலைவாழ் மங்கை ஒருத்தி; அவள் மனதில் இடம்பெற்ற வாலிபன் ஒருவன்; அவனைத் தன் வலையில் வீழ்த்திக் கொண்ட வஞ்சகன் ஒருவன்—இப்படியாக இதுவரை நாம் சந்தித்திராத புதிய பாத்திரங்கள் இந்தக் கதையில் அறிமுகமாகின்றனவாம்.

இந்தப் படத்தைப் பொறுத்த வரையில் இன்னொரு சுவையான செய்தி என்னவென்றால், புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களும் ஒன்றாகச் சேர்ந்து இதில் நடிக்கப்போகிறார்கள். மற்றும் எம். என். ராஜம், தாம்பரம் லலிதா, பி. எஸ். வீரப்பா. 'குலதெய்வம்' ராஜகோபால் — ஆகியோரும் நடிக்க இருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

படத்தின் துவக்க விழாவை 5—6—59 அன்று பாரமவுண்ட் ஸ்டுடியோவில் நடத்த இருப்பதாக திரு ப. நீலகண்டன் அறிவிக்கிறார். விழாவுக்கு சௌந்தரம் கைலாசம் தலைமை வகிக்க—நகரத் தந்தை அ. பொ. அரசு அவர்கள் துவக்கி வைப்பார்கள்.

மேகலா பிக்சர்சின் 'குறவஞ்சி'

ஆகஸ்ட் மாதத்தில் வெளிக்கொணர வேண்டும் என்ற முடிவுடன் மேகலா பிக்சர்சாரின் 'குறவஞ்சி'யைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்; படத்தின் முக்கால் பகுதி வேலைகள் சென்ற மாதத்துடன் முடிவடைந்துவிட்டன. கொடுங்கோலன் ஒருவனின் காமப் பசிக்கு இரையான பரிதாபத்திற்குரிய பெண்கள் அடைக்கப்பட்டுக் கிடக்கும் ஒரு படுக்கை அறைக் காட்சியும், அங்கே அந்தப் படுமோசக்காரனுக்கும், அவன் கொடுமையைத் தடுத்தொழிக்க வந்த கதையின் நாயகனும் சண்டை நடத்தும் நிகழ்ச்சியும் சென்ற கிழமை நெப்ட்யூன் ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது.

தோழர் மு. கருணாநிதி கதை வசனம் அமைத்திருக்கும் இதில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் சாவித்திரியும் பிரதம பாகத்தில் நடிக்கின்றனர். இன்னும் பண்டரிபாய், மைனாவதி, ஓ. ஏ. கே. தேவர், குலதெய்வம் ராஜகோபால்—ஆகியோர் நடிக்கின்றனர். ஏ. காசிலிங்கம் டைரக்ட் செய்கிறார்; ஒளிப்பதிவை துரை மேற்கொண்டிருக்கிறார்; இசைப் பொறுப்பை எடுத்துக் கொண்டு கவர்ச்சிகரமான பாடல்கள் சிலவற்றைப் பதிவு செய்திருக்கிறார், டி. ஆர். பாப்பா.

ஓரியண்டல் மூவீஸ் பொன் விளையும் பூமி!

ஓரியண்டல் மூவிஸ் என்ற பெயரில் திரையுலகிற்கு அறிமுகமான புதிய படக் கம்பெனியார் எடுத்துவந்த 'பொன் விளையும் பூமி' இப்போது முடியும் தருவாயில் இருக்கிறதாம்!

திராவிட நாடு துணையாசிரியரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர்களில் ஒருவருமாகிய இராம. அரங்கண்ணலின் துடிப்பு மிக்க வசனம் இந்தப் படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமையும்.

ஜெமினி கணேசன், பத்மினி, எஸ். வி. சுப்பையா, கே. ஏ. தங்கவேலு—முதலியோர் நடிக்கின்ற இப் படத்தை ஏ. பீம்சிங் டைரக்ட் செய்கிறார்.

காந்தியார் வாழ்க்கை படமாகிறது!

காந்தியாருடைய வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு இரண்டு வண்ணப் படங்கள் தயாராகப் போவதாக செய்திகள் கிடைத்திருக்கின்றன. காந்தியார் பிறந்து, போராடிய இந்த இந்திய உபகண்டத்தில் யாரும் அத்தகைய முயற்சியில் ஈடுபடவில்லை; கலிபோர்னிய சர்வதேச திரைப்பட உற்பத்திக் குழுவின் உப தலைவரான எப். பர்ட் மார்ட்டின் என்பவர்தான் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

சென்ற மாதம் இத்திரைப் படங்கள் சம்பந்தமான வேலைகளை மேற்கொள்ள புதுடில்லிக்கு வந்த அவர் பத்திரிகை நிருபர்களின் கூட்டத்தில் தன் முயற்சி பற்றிப் பேசியிருக்கிறார்.

அவரது படப்பிடிப்பு ஸ்தாபனம், காந்தி சமாரக் நிதியாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இயங்குமாம்; இரண்டு படங்களுக்குமே கிட்டத்தட்ட 12, இலட்சம் டாலர் வரை செலவு செய்யப் போகிறாராம். படங்களில் அமெரிக்க நடிக நடிகையருடன், சில இந்தியர்களையும் நடிக்க வைக்கப் போவதாகவும் அறிவித்திருக்கிறார்.

காந்தியார் பேசிய பழைய ஒலிப்பதிவுகளை இதற்காக அவர் சேகரிக்கப் போகிறார் என்றும், அவைகளைப் படத்தில் சேர்க்கப் போவதாகவும் தெரிவித்திருக்கிறார்.



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

39. புதிய கடல் வழிகள்

அன்புள்ள மாதவி,

கான்ஸ்டான்டிநோபிலின் வீழ்ச்சியால், ஐரோப்பாவில் எப்படி மறுமலர்ச்சி தோன்றியது என்பதை முன்பே நான் விளக்கியுள்ளேன். கிரேக்க அறிஞர்கள் தங்கள் அறிவுக் கருவூலங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு ஐரோப்பாவுக்கு ஓடியதையும் நீ அறிவாய்! அவர்கள் எடுத்துச் சென்ற கையெழுத்துப் பிரதிகளெல்லாம் அச்சு வாகனம் ஏறி, மக்களின் கவனத்துக்கு வந்து அவர்களுடைய கருத்தைக் கவர்ந்தன. பிரதிகளைக் கையால் எழுதிப் படிக்கின்ற நிலைமாறி, அச்சடித்த பிரதிகளைச் சிரமமின்றி ஆயிரக்கணக்கான மக்கள் ஒரே சமயத்தில் படிக்கும் நிலை தோன்றவே, எண்ணங்களும் புதிய கோட்பாடுகளும் வெகு விரைவில் மக்களிடத்திலே பரவின. விக்லிஃப் போன்ற பெரியார்களின் பிரச்சாரம், பைபிளைத் தாங்களே படித்துப் பார்க்க வேண்டுமென்ற ஆசையை மக்களிடத்திலே எழுப்பியது. இதனால் பல்லாயிரக் கணக்கான பைபில் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு மக்களிடையே விற்பனை செய்யப்பட்டன. ஐரோப்பிய மொழிகளிலெல்லாம் பைபில் மொழி பெயர்க்கப்பட்டது. குருமார்களுடைய திருக்கரங்களையும், ஆலயங்களின் புழுதியடைந்த அலமாரிகளையும் அடைக்கலமடைந்திருந்த வேத நூல்கள் பாமரனும் படித்துணரும் ஏடுகளாயின! கல்வி வெள்ளம், தடைகளைத் தகர்த்தெறிந்து, மனிதர்களின் இதயமெல்லாம் பாய்ந்து அறிவை வளப்படுத்தியது.

அச்சு இயந்திரம் வளர்ச்சியடைந்து, நூல்கள் ஏராளமாக வெளிவந்தபோது, அந்த நூல்கள் நல்ல முறையில் அச்சாகவும், மூல நூல்கள் சிதைவின்றி அச்சுவாகனம் ஏறி செம்மையான முறையில் வெளிவரவும் பெரு முயற்சி எடுத்துக்கொண்டவர் வில்லியம் காக்ஸ்டன் என்ற ஆங்கிலேயர் ஆவர். அச்சு யந்திரத்தை முதன் முதல் இங்கிலாந்துக்குக் கொண்டு வந்தவரும் அவரே! காக்ஸ்டனின் பெயர் அச்சு யந்திரத்தோடு இணைத்துப் பேசப்பட்ட அளவுக்கு, நூல் வெளியிடும் தொழிலில் அவர் காட்டிய அக்கறை பேசப்படாதது விந்தையே. காக்ஸ்டன் வெறும் அச்சு யந்திர நிபுணர் மட்டுமல்ல; நுண்மையான இலக்கிய உணர்வு கொண்டவர். ஆங்கில இலக்கியங்களிலே மூழ்கித் திளைத்தவர். அந்த இலக்கியங்களை ஒழுங்கான முறையில் அச்சிட்டு வெளிக் கொண்டு வருவதில் மிகுந்த கவனம் செலுத்தினார். அவருடைய உழைப்பாலும் முயற்சியாலும் நூல் வெளியிடும் தொழில் புதிய அந்தஸ்தைப் பெற்றது என்று சொன்னாலும் அது மிகையாகாது. நூல்களை வெளியிடுவதில் சிக்கனத்தைக் கையாண்டு அவை மலிவாக மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடும் செய்தார். ஆகவே, பணக்காரர்களின் ஏகபோக உரிமையாக இதுவரை இருந்து வந்த ஆங்கில இலக்கியம் காக்ஸ்டனின் முயற்சியால் ஏழைகளின் சொத்தாயிற்று. பல உயர்ந்த நூல்களை காக்ஸ்டனே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துப் புத்தகமாக வெளியிட்டார். இப்படியாக காக்ஸ்டன் ஆங்கில மொழி வளர்ச்சிக்கும் இலக்கியத்துக்கும் அருந்தொண்டாற்றினார்.

ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் அச்சு யந்திரம் தன் அரிய கடமையைச் செய்து கொண்டிருந்தது இதுவரையில் வெறும் கையெழுத்துப் பிரதியாக இருந்த மார்க்கபோலோவின் அனுபவங்கள் புத்தக உருப்பெற்று, கடல் கடந்து செல்லுவதிலும் புதிய புதிய கண்டங்களைக் காண்பதிலும் மக்களின் ஆவலைத் தூண்டின. கான்ஸ்டான்டிநோபில் துருக்கியரின் வசப்பட்டு விட்டதால், ஐரோப்பிய நாடுகள் ஆசிய நாடுகளுடன் வியாபாரத் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள புதிய கடல் வழி காண வேண்டிய அவசியம் எற்பட்டது. போர்ச்சுகீசியரும், ஸ்பானிஷ்காரரும் அவர்களுக்குப் பின் டச்சுக்காரரும், ஆங்கிலேயரும் வியாபார பலம்பெற கடலாதிக்கத்தில் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தனர். கடல் வழி காண வேண்டும்; பற்பல கண்டங்களுக்கும் செல்ல வேண்டும் என்ற அவர்களுடைய ஆசைக்கு உதவியாக அமைந்தவை இரண்டு. ஒன்று மாலுமியின் திசையறி கருவி; மற்றொன்று கிரேக்கப் பூகோள நிபுணன் எரடோஸ்தனஸ் எழுதிய நூல்கள் அச்சாகி, உலகம் உருண்டை என்ற உண்மையை மக்கள் உணர ஆரம்பித்தது! அட்சரேகை, தீர்க்க ரேகை போன்ற கற்பனைக் கோடுகளால் பூகோளப் பரப்பின் எந்த இடத்தையும் அறிய முடியும் என்ற எண்ணம் வேறு வலுத்து வேரூன்றி இருந்தது. கான்ஸ்டான்டிநோபில் அடைபட்டுப் போனதால் ஏற்பட்ட வியாபாரத் தேவை, புதிய கடல் மார்க்கம் காணுவதில் பல நாடுகளை முனைப்புக் காட்டச் செய்தது. உலகம் உருண்டை என்ற புதிய எண்ணம், மேற்குக் கடல்களிலே தொடர்ந்து சென்றால் கிழக்கத்திய நாடுகளை அடைய முடியும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்தது. இந்த எண்ணத்தில் அசையாத உறுதிகொண்டு தளராத முயற்சியில் ஈடுபட்டவன் கிரிஸ்டோஃபர் கொலம்பஸ்!

கி. பி. 1455-லிருந்தே ஆஃப்ரிகாவின் தென்கரையைத்தாண்டி கிழக்கிந்திய நாடுகளுடன் தொடர்புகொள்ள போர்ச்சுகீசியர் முயன்றனர். 1486-ல் மாலுமி நன்னம்பிக்கை முனையைச் சேர்வதில் வெற்றி கண்டான். அதே சமயத்தில் கொலம்பஸ் என்ற இளைஞன் மார்க்கபோலோவின் பிரயாண அனுபவங்களைப் படித்துவிட்டு, அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் மேற்கு திசை நோக்கித் தொடர்ந்து சென்றால், கிழக்குக் கரையில் அமைந்துள்ள ஜப்பான் தீவுகளை அடைய முடியுமென்று திட்டமிட்டுக்கொண்டிருந்தான். ஆனால், ஏழையான அவனுக்குத் தன் எண்ணங்களைச் செயல்படுத்திப் பரீட்சை செய்ய கப்பல்கள் கட்டுவதற்குப் போதுமான பணமில்லை. ஆகவே, கடலாதிக்கத்தில் கவனம் கொண்டிருந்த இங்கிலாந்து மன்னனிடம் உதவி கோரினான்; போர்ச்சுகல் மன்னனை வேண்டினான்; ஸ்பெயின் சக்ரவர்த்திகளிடம் முறையிட்டான். பிரயாண ஆசையும், பொருள் சேர்க்கும் பேராசையும் கொலம்பசைப் பித்தனாக்கிவிட்டதாகக் கூறி அந்த மன்னர்கள் நகைத்தார்கள். ஆனால் நடந்ததோ....!

வேண்டா வெறுப்பாக ஸ்பெயின் சக்ரவர்த்தி மூன்று சிறிய கப்பல்களையும், சில மாலுமிகளையும் கொலம்பசிடம் ஒப்படைத்தான். அந்த மூன்று கப்பல்களிலும் மிகப் பெரிய கப்பலின் எடை நூறு டன்! இந்தக் கப்பல்களை நம்பி, எல்லை காணமுடியாத அட்லாண்டிக் கடலில் புதிய வழி காணப் புறப்பட்டான் கொலம்பஸ். கடலே கொலம்பசின் கல்லறையாக அமைந்து விடும் எனப் பலரும் எண்ணினர்.

இரண்டு மாதங்களுக்குமேல் ஆர்ப்பரிக்கும் அலைகடலின்மேல் கொலம்பசின் மரக் கலங்கள் மிதந்து சென்றன. நிலப்பரப்புகளோ, நிலப்பரப்பின் வருகையை அறிவிக்கும் நிமித்தங்களோ நிகழவேயில்லை. திரும்பிச் செல்ல கொலம்பஸ் விரும்பவில்லை. உடன்வந்த மாலுமிகளோ உறுமினர்; பொறுமினர்; கொலம்பசின் உயிருக்கே உலை வைக்க முடிவும் செய்தனர். அவர்களுடைய திட்டம் நிறைவேறும் நேரம்........

நீரிலே மிதந்து வந்தது ஒரு மரத்துண்டு; இலைகளும் கிளைகளும் ஆங்காங்கே மிதந்தன. பறவையினங்கள் வானவெளியில் பறந்து சென்றன. நிலப்பரப்பு அருகில் இருக்க வேண்டுமென இவை அறிவித்தன. கொலம்பஸ் உயிர் தப்பியது மட்டுமல்ல; மகத்தான சாதனை கைகூடி விட்டது என அனைவரும் மகிழ்ந்தனர். 1492-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11-ம் நாள் இரவு பத்து மணி! சற்று தூரத்தில் இருளில் ஒளி கண்டனர்; கரை தொலைவிலில்லை என முடிவு செய்தனர். இரவு கழிய நெடுநேரமாயிற்று! காலைக் கதிரவனின் உதயம் அவர்களைக் களிப்பில் ஆழ்த்தியது. எல்லையற்ற கடலின் எல்லையைக் கண்டனர். கரையில் இறங்கினர். ஸ்பெயின் நாட்டுக் கொடியைப் பறக்கவிட்டனர்!

அவர்கள் அங்கே சந்தித்த மக்கள் சிவப்பு நிறத்தோடு காட்சியளித்தனர். ஆகவே தாங்கள் வந்து சேர்ந்துள்ள நாடு ஜப்பான் அல்ல என்ற முடிவுக்குக் கொலம்பஸ் வந்தான்.

அப்படியானால், அன்று அவன் அடைந்த இடம்தான் என்ன? முழு விபரத்தையும் அடுத்த கடிதத்தில் தொடர்கிறேன்.

அகத்தியன்.

தொகுதித் தோழர்கட்கு:

குளித்தலைத் தொகுதியில்

மு. கருணாநிதி எம். எல். ஏ.

★

வரும் ஜூன் மாதம் 23-ம் தேதி முதல் 28-ம் தேதி முடிய ஆறு நாட்கள் குளித்தலைத் தொகுதியில் தோழர் மு. கருணாநிதி எம். எல். ஏ. அவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று பார்வையிடவும், குறைகளை நேரில் கேட்டு அறிந்திடவும், கூட்டங்களில் கலந்து கொண்டு சட்ட சபை நடவடிக்கைகளை விளக்கிப் பேசிடவும் சுற்றுப் பயணம் செய்ய இருக்கிறார். சுற்றுப் பயணத்தின்போது நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யும் பொறுப்புக்களை குளித்தலைத் தோழர் முத்துகிருஷ்ணன் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆங்காங்குள்ள கழகத் தோழர்களும், மற்றவர்களும் "தோழர் முத்துகிருஷ்ணன், தி. மு. க., குளித்தலை" என்ற முகவரிக்குத் தொடர்பு கொண்டு, "மு. கருணாநிதி முரசொலி, சென்னை-6" என்ற முகவரிக்கு அத்தொடர்புபற்றிய விளக்கம் எழுதிட வேண்டுமென்றுகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விற்பனையாகிறது!

தில்லைவில்லாளன்
எம். ஏ., பி. எல்.
தீட்டிய

'திரை'

நடிக்கவும், படிக்கவும் இனிக்கும் ஓரங்க நாடகங்களின் தொகுப்பு!

விலை ரூபாய் 1.

விபரங்கட்கு:
பாரி நிலையம்,
பிராட்வே — சென்னை-1.

வெப்பமோ வெப்பம்!
வெந்தணல் வீசுகிறது;
வியர்வை ஒடுகிறது!
கொடுமை...கொடுமை—
கதிரவனின் பாய்ச்சல்!
ஆகவே புறப்படுவீர்,
குளிர்ச்சி குலுங்கும்
குன்றுப் பகுதிக்கு—
என்று அழைத்தார்கள்!

கலப்படம்

"மந்திரியாகப் படைப்பாய்-அல்லது மிருகமாகப் படைப்பாய்!"

'பெனிசிலின் இன்ஞ்செக்ஷன்' ஒன்றை தேவலோகத்தின் மருத்துவர் போட்ட பிறகுதான், கடைசியாக அந்தப் பிடி மண்ணைக் கையில் எடுத்து உருட்டினர், பிரம்ம தேவன்!

அன்று பொழுது விடிந்தது முதல் தேவலோகத்தின் 'உற்பத்தி இலாக்கா' மிகவும் சுறுசுறுப்பாக இருந்தது! ஆயிரக்கணக்கான மண் உருண்டைகளைப் பிடித்தார் பிரம்மா! அவைகளை எல்லாம் உலகத்தின் பல பகுதிகளிலும் வீசி வீசி எறிந்தார்! அவை எல்லாம் சிசுக்களாக மாறி, 'உலகப் பிறவி' என்ற அந்தஸ்தைப் பெற்றுவிட்டன!

பாவம்; கை வலித்தது அவருக்கு; ஆகவே மருத்துவமும் தேவைப்பட்டது! இனிமேல் ஒய்வுக்குப் புறப்பட வேண்டும் என்ற அவசரத்தில் கடைசி பிடி மண்ணை எடுத்தார்; உருட்டினர்; பூமியை நோக்கி வீசி எறியத் தயாரானர்!

அந்த சமயத்தில்தான்...

"வேண்டாம்! வேண்டாம்!"

— தேவலோகத்தையே கிடுகிடுக்க வைத்த இந்தப் பெரொலி எழுந்தது!

பிரம்மா நடுங்கி விட்டார். இந்த அலறல் எங்கிருந்து கிளம்பிற்று என்ற திகைப்பு—அசுரன் யாரேனும் படையெடுத்து வந்துவிட்டானே என்ற பயம் — அவரைச் சற்று நேரம் சிலையாக்கி விட்டது!

"யாரது?" — உற்பத்தி மாளிகையின் சுவர்களில் மோதி எதிரொலித்தது, அவரது நான்கு முகங்களில் உள்ள நான்கு வாய்களும் ஏக காலத்தில் எழுப்பிய இந்தக் கோபக் குரல்!

"நான்தான் ஆண்டவனே!" —பிரம்மாவுக்கு இப்போது இரட்டைத் திகைப்பு! அவர் தன் கையிலிருந்த மண் உருண்டையை உன்னிப்பாக கவனித்தார்!

"ஆக்கும் தொழில் கொண்ட பிரம்ம தேவனே! நான்தான் பேசுகிறேன்!"

—அந்த மண் உருண்டைதான் இப்படிப் பேசியது! பிரம்மாவின் விழிகள் அகலத் திறந்தன.

"என்னை எப்படிப் படைக்கப் போகிறீர்கள், கடவுளே?" — அவரது வியப்பு தீருமுன்னதாக அடுத்த கேள்வி ஒன்றையும் தொடுத்தது மண் உருண்டை!

"இன்று நான் இதுவரை ஐயாயிரத்து நானூற்று எழுபத்தெட்டு உயிர்களைப் படைத்திருக்கிறேன்! கடைசி பிடி நீ—உன்னை மானிடப் பிறவியாகத்தான் படைக்கப் போகிறேன்!"

"ஐயையோ! கொடுமை!" அலறிற்று மண் உருண்டை!

"அதுவும் பாரதத் தாயின் மடியிலே நீ விழப் போகிறாய்! இராமமூர்த்தி அவதரித்த பூமியிலே நீ தவழப் போகிறாய்! கண்ணபிரானின் கீதை உபதேசிக்கப்பட்ட புனித மண்ணல்லவா அது; அங்கே பிறவி கிடைக்க வேண்டுமே என்பதற்காகத் தவம் கிடப்போர் அந்தப் பூதலத்திலே கோடி கோடியாயிற்றே பிண்டமே!"

"உலகத்தில் வேறு எங்கேயும் எனக்கு இடமில்லையா தேவனே? எங்குமா 'நோ வேக்கன்சி' பலகைகள் தொங்குகின்றன?"

"இல்லை; இல்லை! உனக்காக தேவலோகத்து சட்டத்தைமாற்ற முடியாது! பார்லிமெண்ட்டும் அதற்கு இடம் தராது!"

சற்று நேரம்வரை அந்த மண் உருண்டை பேசவில்லை. விசித்து விசித்து அழும் குரல் மட்டும் கேட்டது. கடைசியில் தொண்டைத் தழு தழுக்க அது பேச ஆரம்பித்தது.

"என்னை இந்தியாவில்தான் வீசி எறியப் போகிறாயா, தெய்வமே?"

"ஆமாம்!"

"மானிடப் பிறவியாகவா?"

"ஆமாம்; ஆணாக!"

"வேண்டாம்; ஒரே ஒரு உதவியாவது செய்ய முடியுமா?"

"என்ன?"

"பிறந்தவுடனேயே என்னை இங்கே அழைத்துக்கொள்ள முடியுமா?"

"முடியாது; முடியாது! அது வேறு இலாக்காவின் வேலை! பிறந்தவுடன் 'எமதர்மனு'க்கு மனு எழுதிப்போடு; அவர் கவனிப்பார்! இப்போது என் நேரத்தை வீணாக்காதே! இதோ படைக்கப்போகிறேன், உன்னை!"

"ஐயையோ, ஆண்டவனே! என்னை மனிதனாகப் படைத்து விடாதே! காகிதம் தின்னும் கழுதையாக வேண்டுமானாலும் படைத்துவிடு!"

"முடியாது!"

"அல்லது சேற்றிலே புரளும் எருமையாகவாவது படைக்கக் கூடாதா?"

"முடியாது!"

"சாக்கடையோரத்திலே வாசம் செய்யும் பன்றியாகப் படையேன்?"

"முடியாது!"

"எச்சில் இலையை நக்கிப் புசிக்கும் நாயாகப் படைப்பதிலும் கேடுண்டா?"

"முடியாது!"

"மண்ணிலே நெளியும் புழுவாக...?"

"அதுவும் முடியாது!"

"பூச்சியாக...?"

"முடியாது! முடியாது!! முடியாது!!!"

"ஓ" வென்று அலறியது அந்த மண் உருண்டை!

"மிருகமாகப் பிறப்பேன் என்கிறாயே; மதிப்புள்ள மனிதனாக வாழ்வதிலே என்ன குறையைக் காண்கிறாய்? நாளை நீ 'மகாத்மா'வாகலாம்; 'மனிதகுல மாணிக்கமாக' மாறலாம்!" என்றார் பிரம்மா!

"எல்லாம் சரிதான்! அங்கே மகாத்மாக்களுக்கும், மனிதகுல மாணிக்கங்களுக்கும் மட்டுமல்ல; மந்திரிகளுக்கும்கூட உயர்ந்த மதிப்புண்டு! ஆனால், வெறும் மனிதனுக்கு மதிப்பில்லை; மிருகத்திற்கு உள்ள மதிப்புகூட இல்லை!"

"நீ பேசுவது விசித்திரமாக இருக்கிறதே!"

"விசித்திரம் இல்லை! உங்கள் நண்பர் அக்கினி பகவானின் கொடுமையால் அங்கே 105 டிகிரி வெப்பம் தகிக்கிறது, இப்போது!"

"ஏன்; தகிக்கும் வெப்பத்தைத் தணித்துக் கொள்ளத்தான் மலை வாசஸ்தலங்கள் இருக்கின்றனவே; இங்கிருக்கும் கைலயங்கிரியைப்போல!"

"இருக்கின்றன! ஆனால், அங்கே அரசாங்கம் அனுப்புவது யார் யாரைத் தெரியுமா?"

"சொல்லேன்; தெரிந்து கொள்கிறேன்!"

"மந்திரிகள் போகிறார்கள்! மிருகங்களும் போகின்றன!"

"என்ன?"

"ஆமாம்; சென்னை மந்திரிகள் உதகைமண்டலம் போனார்கள், வெயிலைத் தணித்துக்கொள்ள! கும்பி கொதிக்க—குடல் எரிய—வாடினார்கள், அந்த வட்டாரத்து மக்கள்! எதிர்ப்புக் குரல் எழுப்பினார்கள்! பலனேயில்லை! இப்போது..."

"இப்போது என்ன? அந்த ஏழைகளையும்கூட உதகைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்களா?"

"இல்லை; இல்லை! உத்தரப் பிரதேசம் என்ற மாகாணத்திலிருந்து மிருகங்களை அழைத்துச் சென்றிருக்கிறார்கள், நைனிட்டால் என்ற குளிர் குலுங்கும் குன்றுப் பகுதிக்கு!"

"மிருகங்களையா? உண்மையாகவா?"

"ஆமாம் ஆண்டவனே! உத்தரப் பிரதேச காங்கிரஸ் அரசாங்கம் 38 மிருகங்களை அனுப்பி விட்டது, நைனிட்டாலுக்கு! அதிலே நான்கு டெல்லியிலிருந்து சென்றிருக்கின்றன; அவைகள் எங்கள் 'ஏழைப் பங்காளரான' பிரதம மந்திரி நேருவின் அன்புக்குரியவைகளாம்! மற்றவை லக்னோ மிருகக் காட்சி சாலையிலிருந்து பொறுக்கப்பட்ட மான், கரடி முதலியவை! ரயிலில் 'ரிசர்வ்' செய்யப்பட்ட முதல் வகுப்பில் பிரயாணம் — பிறகு மலைப்பாதையில் தனி பஸ்களில் பயணம் — இப்படி மலை வாழ்வு அனுபவிக்கச் சென்று விட்டன, அந்தக் கொடுத்துவைத்த மிருகங்கள்!"

"நம்பவே முடியவில்லையே!"

"நம்ப முடியாதவைகள்தான் நாள்தோறும் நடைபெறுகின்றன, அந்தப் பாரத மண்ணில்! ஆகவேதான் சொல்லுகிறேன், படைக்கும் தெய்வமே! ஒன்று என்னை மந்திரியாகப் படைத்துவிடு! அல்லது மிருகமாகப் படைத்துவிடு!"

மண் உருண்டையின் இந்த மனதை உருக்கும் வேண்டுகோள் மகேஸ்வரனின் இதயத்தைத் தொடவில்லை! "முடியாது! முடியாது!!" என்று கர்ஜித்தார்; கையை ஓங்கினர்; பிண்டத்தை இந்தியா இருந்த திசை நோக்கி வீசி எறிந்தார்! மறுகணம், அந்த மண் உருண்டை எங்கே பிறந்ததோ தெரியவில்லை....

"குவா...! குவா...!!" என்ற அலறல் திடீரென்று எழும்பியது!

[நான் திடுக்கிட்டேன்; விழித்தேன். என் அக்காள் பெற்றெடுத்த அழகுச் சிலை காலையும், கையையும் உதைத்துக் கொண்டு, வெப்பத்தின் கொடுமையால் ஏற்பட்ட வியர்வைக் கட்டிகளின் வேதனையை தாங்காது அழுதுகொண்டிருந்தான்! என் மார்பிலே கிடந்த தினசரியில், "உத்தரப் பிரதேச அரசாங்கம் அனுப்பிய 38 மிருகங்களும் சுகமாக நைனிட்டால் போய்ச் சேர்ந்தன!" என்ற தலைப்பு கொட்டை எழுத்துக்களில் தென்பட்டது!]

அது மட்டுமா?

★ முதல் வகுப்பிலே பிரயாணம் --
★ தேவைக்கு ருசியான உணவு --
★ சேவை செய்யப் பணியாட்கள்!

போதாதா?
புறப்பட்டுவிட்டார்கள், 38 பேர்!
யார் அந்தக் கொடுத்துவைத்தவர்கள்?

சுழல் விளக்கு

மாலுமி

எம். பி. குமார்; மைலாப்பூர்.

(?) எழுத்தாணி முதன் முதல் மைலாப்பூரில்தான் தோன்றியது என்பது உண்மையா?

முன்பே தமிழ்ப் புலவர்கள் உபயோகித்திருக்கிறார்கள் — என்பதை மறந்துவிட்டால் அது உண்மைதான்!

எம். எஸ். மணி; அரியலூர்.

(?) நகரத் தந்தை அ. பொ. அரசு, பொதுக் கிளர்ச்சியாகிய "ஆகாஷ்வாணி" எதிர்ப்பை ஆதரித்து, வானொலியில் பேச மறுத்தது கண்டிக்கத்தக்கது— என்று 'விகடனும்' 'கல்கி'யும் எழுதியிருக்கின்றனவே: அது பற்றி தங்கள் கருத்து என்ன?

வானொலியின் மூலமாகத்தான் நகர மக்களுடன் முந்தைய மேயர்கள் எல்லாம் பேசினார்களாம்; ஆனால் நம்மவர் அப்படியல்லவே — நேரிலேயே மக்களை சந்திக்கிறார்; பேசுகிறார்; தேவைகளை கவனிக்கிறார்! ஆகவே சம்பிரதாயத்தை மாற்றுவது தவறு என்கிற அத்தகைய ஏடுகள் இதை உணர வேண்டும், முதலில்.

சி. சு. தேவராசன்; லால்குடி.

(?) ஆஸ்திகன் நாஸ்திகனாக மாறுவது பிரச்சாரத்தால் முடியும் என்கிறீர்களா?

பகுத்தறியும் பண்பு பெற்றவர்களால்தான் பிரச்சாரத்தின் பொருளை உணர்ந்துகொள்ள முடியும். ஆனால் 'இரும்புப் பிடிகள்' ஏராளமாக இருக்கின்றனவே; அவர்களுக்கெல்லாம் ஆண்டவனே தன் 'மகத்தான' சக்தியை நிரூபித்துக் காட்டினால்தான் தெளிவு பெறுவார்கள். சீரங்கம் ரெங்கநாதர் எரிந்ததும், கும்பகோணம் கோபுரம் இடிக்குப் பலியானதும் பிரச்சாரத்தைவிட அதிகப் பலனளித்திருக்கும், தோழரே!

பன்னீர்ச்செல்வம்; கரூர்.

(?) ஐந்து ஏக்கர் நிலம் பெற்ற தியாகிகள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

கரம்பு நிலத்திலே கதிர் சாய்க்க முடியாது போகவே; அங்கு விளைந்து கிடக்கும் கூழாங்கற்களை வாங்கிச் செல்ல 'திக்கு வாய்க்காரர்களை'த் தேடிக் கொண்டிருக்கிறார்களாம்!

பி. டி. செல்வபதி; திருவையாறு.

(?) சந்திரமண்டலத்திற்குச் செல்லும் முதல் மனிதராக பிரதமர் நேருவை அனுப்பிவைத்தால், செல்வாரா?

அவரை மட்டும் அனுப்பினால் நிச்சயம் போகமாட்டார்! அவருடன் ஒரு டஜன் காந்தியார் சிலைகள், நூறு கதர்க் கொடிகள், ஒரு கூடை ரோஜா மலர்கள்—இவைகளையும் அனுப்பி வைத்தால், இரண்டு வாரம் 'வெற்றிகரமான' சுற்றுப் பயணம் செய்து விட்டுத் திரும்பி வருவார்!

பி. எஸ். லோகநாதன்; ஒட்டேரி.

(?) சென்னை நகரில் இந்த ஆண்டு அதிகமாக அனல் அடிக்கிறதே; என்ன காரணம்?

சென்னை மாநகர மன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வெற்றி கண்டு, காங்கிரஸ்காரர்கள் விடுகின்ற பெருமூச்சாக இருக்கலாம்!

எஸ். கே. திருமாறன்; போடி.

(?) பண்டித நேரு உதகை மண்டலத்திலே குதிரையின் மேல் சவாரி செய்தாராமே ....?

ஆமாம்; காமராசரது முதுகுக்கு ஓய்வு கொடுப்பதற்காக சவாரியை மாற்றிக் கொண்டிருக்கிறார்போலும்!

தொண்டைமான்; ஈரோடு.

(?) "சட்டசபை உதகைமண்டலத்திற்குச் செல்வதை எதிர்த்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மேயர் அ. பொ. அரசு மட்டும் நகரசபைக் கட்டிடத்தில் 'ஏர் கண்டிஷன்ட்' அறையில் அமர்ந்திருக்கலாமா?" என்று தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த ஒரு தலைவர் பேசியிருக்கிறாரே; அதுபற்றி நீங்கள்என்ன கருதுகிறீர்கள்?

'ஏர் கண்டிஷன்' என்பது ஆடம்பர வகையைச் சேர்ந்ததல்ல. அது இருந்தால்தான் அனல் கொளுத்தும் இந்தக் காலத்தில் அயர்வின்றி; வியர்வைச் சகதியிலிருந்து தப்பி; அதிக நேரம் உழைக்க முடியும்?

இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தீர்களேயானால் வரிப்பணத்தைப் பாழாக்கி ஆரண்மூர் அரண்மனையை விலைக்கு வாங்கி தெண்டச் செலவு செய்வதற்கும் இதற்கும் உள்ள வேறுபாட்டை நீங்களே உணர்ந்து கொள்வீர்கள்!

கே. வேல்மணி; கல்லக்குடி.

(?) டால்மியாவுக்கு ஏன் சிறைத் தண்டனை கொடுத்திருக்கிறார்கள்?

அப்படிப்பட்ட நம்பிக்கைமோசடி செய்தவரின் பெயரை தமிழகத்துச் சிற்றூருக்கு வைத்திருக்கிறீர்களே; உங்களுக்கு மானமில்லையா—என்று இங்குள்ள ஆட்சியாளரைப் பார்த்து நாமெல்லாம் கேட்பதற்குத்தான்!

காகிதம் செய்கிறார்...

[2—ம் பக்கத் தொடர்ச்சி]

உலகில் முன்னேறியுள்ள நாடுகள் நிறைய காகிதத்தை உபயோகிக்கின்றன. தனி நபர் காகிதச் செலவழிப்பு அமெரிக்காவில் 284 பவுண்டுகள்; இங்கிலாந்தில் 150 பவுண்டுகள்; நார்வேயில் 154 பவுண்டுகள்; கானடாவில் 350 பவுண்டுகள்; ஜப்பானில் 24 பவுண்டுகள்; ஆனால், இந்தியாவில் ஒன்றரை பவுண்டுகள்! எனவே, இந்தியாவில் மிகக் குறைவாகவே காகிதம் செலவாகின்றது.

இந்நிலையில் இந்தியாவில் காகிதம் அதிகமாகப் பயனாகும் வாய்ப்பு நிறைய ஏற்படலாம் என நம்ப இடமுண்டு. திராவிடம் காகிதத் தொழிற்சாலை அபிவிருத்தியில் நல்ல கவனம் செலுத்த வேண்டும். ∴

வாழ்க மணமக்கள்!

ஆவுடைநாதன் - சாந்தா

காட்டூர் பெருநிலக்கிழாரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் நெருங்கிய தொடர்பு கொண்டவருமான கே. வி. இராமையா அவர்களின் புதல்வி சாந்தாவிற்கும், சோழவந்தான் திரு. ஆர். பாலகுருசாமி அவர்களின் செல்வர் ஆவுடைநாதன் அவர்களுக்கும் காட்டூரில் மிகச் சிறப்புற திருமணம் நடந்தேறியது. 20—5—59 அன்று நடைபெற்ற இவ்விழாவிற்கு தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் தலைமை வகித்தார்கள். அறிஞர் அண்ணா அவர்களும், பொதுச் செயலாளர் அவர்களும், மற்றும் பலரும் மணமக்களை வாழ்த்திப் பேசினார்கள்.

மணமக்கள் நலம் பல பெற்று சீருடனும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகிறோம்.

திருச்சி மாவட்ட

தி. மு. க. 3-வது மாநாடு

1959 ஜூன் 20, 21 சனி, ஞாயிறு நாட்களில் துறையூரில் நடைபெறும்.

தலைவர்:	திறப்பாளர்:
'சிந்தனைச் சிற்பி' சி. பி. சிற்றரசு	'முரசொலி' மாறன் எம். ஏ.

அறிஞர் அண்ணா

பொதுச்செயலாளர்

நாவலர் நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

[இரு நாட்களிலும் நாடகமும், இசை நிகழ்ச்சிகளும் உண்டு.]

நன்கொடை, இருநாட்களும் ரூ. 10, 5, 2. பெண்கள் ரூ. 1.

—வரவேற்புக் குழு.

தேவை

பத்திரிகைத் துறையில் அனுபவமுள்ள ஓவியர் ஒருவர் உடனே தேவை. நேரிலோ, அல்லது தபால் மூலமோ விண்ணப்பிக்கவும்.

— நிர்வாகி, "முரசொலி", சென்னை-6

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு